ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 3) Aug 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

## அடியேன் உரை

நம்பெருமாள் விஜயத்தின் கடந்த மலருக்கு மிகவும் நல்ல வரவேற்பு கிட்டியுள்ளது. இது அரங்கனின் திருவுள்ளம் என்றே கொள்ளவேண்டும்.

இந்த மாதம், அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்த ஆண்டாளின் திருநக்ஷத்ரம்(15.08.2007) வருகிறது. அந்த நன்னாளை ஒட்டி, இந்த இதழில் பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாளைப் பற்றி, பெரியதிருமுடியடைவு என்ற நூலில் உள்ள குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட ச்லோகம் அடையாள முத்திரையாக விளங்குவது வழக்கம். நம்பெருமாள் விஜயத்தின் முத்திரையாக பின்வரும் நாச்சியார் திருமொழி பாசுரத்தினை அரங்கனின் திருவுள்ளமாக அடியேன் எடுத்துள்ளேன்.

கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் ... வாஸுதேவம் ஸர்வம்

ஸ்ரீ அஹோபில தாஸன்

க. ஸ்ரீதரன்

# உட்பொதிவு

1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. அமலனாதிபிரான்
7. ஆண்டாள்

தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

## ஸ்ரீரங்கராஜஸ்தவம்
### (பகுதி – 3)

21. துக்த அப்தி: ஜநகோ ஜநநீ அஹம் இயம் ஸ்ரீ: ஏவ புத்ரீ வர:
ஸ்ரீரங்கேச்வர: ஏதத் அர்ஹம் இஹ கிம் குர்யாம் இதி இவ ஆகுலா
சஞ்சத் சாமர சந்த்ர சந்தந மஹாமாணிக்யா முக்தா உத்கராந்
காவேரீ லஹரீகரை: விதததீ பர்யேதி ஸா ஸேவ்யதாம்

பொருள் – காவேரி பின்வருமாறு சிந்தித்தாள் : திருப்பாற்கடல் எனது கணவனாகவும், ஸ்ரீரங்கநாச்சியாரின் தந்தையாகவும் உள்ளது. ஆக ஸ்ரீரங்கநாச்சியார் எனக்குப் பிறந்த மகளாக உள்ளாள். அவளது நாதனான நம்பெருமாள் எனக்கு மருமகனாக உள்ளான். இப்படிப்பட்ட மணமகளுக்கும் மாப்பிள்ளைக்கும் நான் என்ன சிறப்பும் சீரும் செய்யப் போகிறேன் – என்று கலக்கமுற்று நின்றாள். ஒரு முடிவுக்கு வந்தவளாக – சாமரங்கள், பச்சைக்கற்பூரம், சந்தன மரங்கள், உயர்ந்த மாணிக்க இரத்தினக் கற்கள், முத்துக்கள் – ஆகிய இவற்றைக் குவியல் குவியலாகத் தனது அலைகள் என்ற கையால் ஏந்தியபடி வந்தாள். இவ்விதம் அரங்கனின் தொண்டில் ஈடுபட்ட காவேரியை அனைவரும் நாடி வணங்கி நீராட வேண்டும்.

விளக்கம் – அனைத்து நதிகளும் கடலில் சென்று கலப்பதால், அந்தக் கடல் என்பது நதிகளின் கணவன் என்றே கருதப்படுகிறது. திருப்பாற்கடலில் வெளிப்பட்டவள் மஹாலக்ஷ்மி ஆவாள். ஆகவே தன்னைத் தாயாகவும், திருப்பாற்கடலைக் கணவனாகவும் கொண்டு, தங்கள் மகளாக ஸ்ரீரங்கநாச்சியார் இருப்பதாக் காவேரி எண்ணுகிறாள்.

22. தீர்த்தம் சுந்ததி பாதி நந்தந தரூந் ரத்த்யா அங்கணாநி உக்ஷதி
ஸ்நாநீய அர்ஹண பாநவாரி வஹதி ஸ்நாத: புநீதே ஜநாந்
ச்யாமம் வேதரஹ: வ்யநக்தி புளிநே பேநை: ஹஸந்தீ இவ தத்
கங்காம் விஷ்ணு பதீத்வ மாத்ரமுகராம் ஹேம ஆபகா ஹந்து அகம்

பொருள் – தீர்த்தம் என்ற பெயருடைய புண்ணிய நீரையும் காவேரியானது தூய்மை அடையச் செய்கிறது. பெரியபெருமாளின் நந்தவனத்தில் உள்ள மரங்களைக் காப்பாற்றியபடி உள்ளது. நம்பெருமாள் எழுந்தருளும் திருவீதிகளையும், சந்திகளையும் நனைக்கிறது(நம்பெருமாள் எழுந்தருளும்போது திருவீதிகளில் நீர் தெளிப்பது வழக்கம்). நம்பெருமாளின் திருமஞ்சனத்திற்கும், திருவாராதனத்திற்கும் ஏற்புடையதான நீரை அளிக்கிறது. தன்னிடம் நீராடும் மக்களின் உடல் அழுக்கு மட்டும் அன்றி, மன அழுக்கையும் நீக்கிவிடுகிறது. வேதங்களின் உட்பொருளான பெரியபெருமாளைத் தனது கரையில் அனைவரும் வணங்கும்படிச் செய்கிறது. த்ரிவிக்ரமனாக எம்பெருமான் அவதாரம் செய்தபோது, அவனது திருவடிகளில் இருந்து பிறந்தவள் என்ற அஹங்காரத்துடன் கங்கை உள்ளாள். ஆனால் காவேரியோ பெரியபெருமாளின் கைங்கர்யத்தில் தன்னை எப்போதும் ஈடுபடுத்திக்கொண்டு, தன்னுடைய நுரைகள் என்ற புன்னகையை வெளிப்படுத்தியபடி உள்ளது. இப்படிப்பட்ட காவேரி நமது பாவங்களை நீக்கட்டும்.

23. அகணிதகுண அவத்யம் ஸர்வம் ஸ்திரத்ரஸம் அப்ரதிக்ரியம்
அபி பய: பூரை: ஆப்யாயந்தீ அனு ஜாக்ரதீ
ப்ரவஹதி ஜகத் தாத்ரீ பூத்வா இவ ரங்கபதே: தயா
சிசிரமதுர அகாதா ஸா ந: புநாது மருத்வ்ருதா

பொருள் – ஏதோ சில கர்மபயன்கள் காரணாமாகத் தாவரங்களாகவும் அசையாப் பொருள்களாகவும் சில உள்ளன. இவைகளால் தங்களுடைய கர்மபயனுக்கு ஏற்ற ப்ராயச்சித்தம் கூடச் செய்ய இயலாது. இப்படிப்பட்ட தாவரங்கள் முதலானவைகளுக்கும், அவற்றின் குணங்கள் முதலானவற்றைப் பாராமல் காவேரியானது, தனது நீரின் மூலம் மகிழ்ச்சி ஏற்படுத்தியபடி உள்ளது. குழந்தைக்குத் தாய்ப்பால் அளிக்கும் தாய், அதனுடன் விழித்திருப்பது போன்று, இந்தக் காவேரியும் அந்த உயிர்களுக்காக விழித்தபடி உள்ளது. நம்பெருமாளின் கருணை போன்று எங்கும் சூழ்ந்தபடி ஓடுகிறது. இப்படிப்பட்ட குளிர்ந்ததும் இனிமையானதும் ஆகிய காவேரி நம்மைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

24. தரள தனு தரங்கை: மந்தம் ஆந்தோள்யமாந
ஸ்வ தட விடபிராஜீ மஞ்ஜரீ ஸ்ப்த ப்ருங்கா
க்ஷிபது கநக நாம்நீ நிம்நகா நாளிகேர
க்ரமு கஜ மகரந்தை: மாம்ஸலாபா மதம்ஹ:

பொருள் – ஓசையுடன் கூடியதாகவும், சிறியதாகவும் எழும்பும் தனது அலைகளால், தன்னுடைய கரைகளில் உள்ள சோலைகளை மெதுவாகச் சென்று மோதுகிறது(காவேரி). இவ்விதம் மோதுவதால் அங்குள்ள மலர்க்கொத்துக்கள் அசைந்தாட, அவற்றில் உள்ள வண்டுகள் இன்பமாக உறங்குகின்றன. மேலும் அந்தச் சோலையில் உள்ள தெங்கு, பாக்கு முதலானவற்றில் மகரந்தம் அதிகமாகப் பெருகும்படியும் செய்கிறது. இப்படிப்பட்ட நீரைக் கொண்டதும் பொன்னி என்று அழைக்கப்படுவதும் ஆகிய காவேரி, எனது பாவங்களைக் கழுவ வேண்டும் (ச்லோகத்தில் உள்ள கநக நாம்நீ என்ற பதம் தங்கத்தைத் தனது பெயராக உடையவள் என்ற பொருள் தரும். இதுவே தமிழில் பொன்னை உடையவள், ஆக பொன்னி என்றானது).

25. கதள வகுள ஜம்பூ பூக மாகந்த கண்ட்ட
த்வயஸ ஸரஸ நீராம் அந்தரா ஸஹ்யகந்யாம்
ப்ரபல ஜல பிபாஸா லம்பமநா அம்புத ஓக
ப்ரமகர தரு ப்ருந்தம் வந்த்யதாம் அந்தரீபம்

பொருள் – வாழைமரங்கள், மகிழமரங்கள், நாவல்மரங்கள், பாக்குமரங்கள் ஆகியவற்றின் கழுத்தளவிற்குக் காவேரி செல்கிறது. இதனைக் காணும்போது, இனிமையான நீரை உடைய காவேரியின் நடுவில், நீண்ட தொலைவு ஓடிச் சென்றதால் களைத்துப் போகும் மேகங்கள், தங்கள் தாகம் தீர்த்துக் கொள்ள இறங்கி நிற்பதைப் போன்று அந்த மரங்கள் உள்ளன(காவேரி நீருக்கு மேல், மரங்களின் மேற்பகுதி மட்டும் தெரிவதால், அவற்றைக் காணும்போது மேகக்கூட்டங்கள் போன்றுள்ளன என்று கருத்து). இப்படிப்பட்ட சோலைகளால் சூழப்பட்ட திருவரங்கம் என்ற தீவானது அனைவராலும் வணங்கப்பட வேண்டும்.

26. யத் விஷ்ணோ: பதம் அதம: பரோரஜ: அக்ர்யம்
முக்தாநாம் அநுவிரஜம் விதீப்ரம் ஆஹு:
தத் புண்யம் புளிநம் இதந்த்யா அத்ய மத்யே
காவேரி ஸ்ப்புரதி தத் ஈக்ஷிஷீய நித்யம்

பொருள் – விரஜா நதியின் கரைகளில் உள்ளதும், தமோ–ரஜோ குணங்கள் அற்றதும், மிகவும் உயர்ந்ததும் ஆகிய பரமபதத்திற்கு, முக்தி பெற்ற ஜீவன் (முக்தர்கள்) செல்வதாக விஷயம் அறிந்தர்வர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட உயந்ததும், தூய்மையானதும் ஆகிய பரமபதம் என்ற மணல்குன்று (விரஜா நதின் கரையாகையால் இவ்விதம் கூறுகிறார்), இந்தப் பூமியில் உள்ளது என்று கூறலாம்படியாக காவேரியின் நடுவில் வந்து நின்றது(திருவரங்கம் என்று கருத்து). இப்படிப்பட்ட இந்தத் தீவை நான் எப்போதும் கண்டு மகிழ்ந்தபடி இருப்பேனாக.

27. த்ரய்யந்த ப்ரஹ்தி மதீஷ் வைஷ்ணவாநாம்
ப்ராப்யாஸ் ப்ரசுர பவ ச்ரம அபஹாஸ்
காவேரீ பரிசரிதாஸ் பாவநீஷ்
ஸ்ரீரங்க உபவந தடீஷ் வர்த்திஷீய

பொருள்– (அடுத்து சோலைகளின் வர்ணனை தொடங்குகிறது) வேதாந்தங்களின் அப்யாஸம் என்றும் உடையது, ஸம்ஸாரிகளின் துன்பங்களையும் ச்ரமங்களையும் களைப்பையும் நீக்க வல்லது, நமது விருப்பங்களை நிறைவேற்ற வல்லது (தூய்மையானது என்றும் பொருள் கூறுவர்கள்), பெரியபெருமாளையே தங்கள் உபாயம் என்றும், அடையத்தகுந்த பொருள் என்றும் உள்ளவர்களுக்கு பரமபதம் போன்றது, திருக்காவேரியின் இனிமையான காற்றாலும் அலைகளாலும் தீண்டப்பட்டது – இப்படிப்பட்ட திருவரங்கம் பெரியகோயிலின் சோலைகளில் நான் வாழ்ந்து வருவேன்.

28. ஸ்ப்புரித சபர தீர்யத் நாளிகேரீ குளுச்ச ப்ரஸ்ருமர
மது குல்யா வர்த்தித அநோகஹாநி
ரதிம் அவிரதி ரங்க ஆராம் ரம்ய ஸ்த்தலாநி க்ரமுக
பநஸ மோசா மேசகாநி க்ரியாஸு:

பொருள் – காவேரி நீரில் உள்ள பெரிய மீன்கள் துள்ளிக் குதிக்கும்போது, அவை கரைகளில் உள்ள தென்னை மரங்களின் காய்குலைகளிலும் மலர்க்குலைகளிலும் சென்று மோதுகின்றன. அந்த வேகம் தாங்காமல் அந்தத் தேங்காய்கள் உடைந்து அவற்றில் உள்ள இளநீர் ஆறு போன்று ஓடுகிறது. அந்த இளநீற் ஆற்றின் காரணமாக அங்குள்ள மரங்கள் செழிப்பாக உள்ளன. அங்குள்ள சோலைகள் பாக்கு மரங்கள், பலா மரங்கள், வாழை மரங்கள் ஆகியவற்றால் சூழ்ந்து, கறுத்து உள்ளன. இவை காண்பதற்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும்படி உள்ளன.

29. அதிபரமபதம் புரீம் அயோத்யாம் அம்ருதவ்ருதாம் அபராஜிதாம் உசந்தி
புளிநம் உபரி ரங்கராஜதாநீ பிசிதத்ருசாம் அபி ஸா புர: சகாஸ்தி

பொருள் – (இனி வரும் மூன்று ச்லோகங்களில் திருவரங்கத்தை வர்ணைனை செய்கிறார்) – பரமபதத்தில் விரஜா நதியால் சூழப்பட்டதாகவும், அயோத்யாம் என்று கூறப்படுவதும், அபராஜிதை என்று பெயர் கொண்டதும் ஆகிய ஒரு உயர்ந்த நகரம் உள்ளதாகக் கூறுவார்கள். அப்படிப்பட்ட அயோத்யா நகரம், காவேரியின் மணல்கரையில் வந்து நின்றது போன்று திருவரங்கன் ஆளும் இந்த நகரம் உள்ளது. இதன் மூலம் அந்த அயோத்யா நகரம் நம் போன்ற மாம்ஸக் கண்கள் கொண்டவர்களாலும் காணும்படி உள்ளது.

30. பவபதம் அபி திவ்யதாம கர்த்தும் தத் உபய தந்த்ரித ஹர்ம்ய மாலிகா இவ
பவந மணிதலை: விஜ்ரும்பமாணா ஜயதி தராம் இஹ ரங்கராஜதாநீ

பொருள் – மிகவும் உயர்ந்த மாடமாளிகைகள் இந்த உலகிற்கும் அந்த உலகிற்கும் தொடர்பு ஏற்படுத்தும்படியாக நின்றன. அந்த மாடமாளிகைகளில் விலைமதிப்பற்ற ரத்னக் கற்கள் பதிக்கப்பட்ட மேல்தளங்கள் உள்ளன. இவை இந்த ஸம்ஸார மண்டலத்தை நித்யவிபூதியாக மாற்றவே இவ்விதம் உள்ளனவோ எனத் தோன்றுகிறது. ஸ்ரீரங்கராஜன் செங்கோல் கொண்டு ஆளும் இந்த நகரம், இந்த உலகில் மிகவும் மேன்மை பெற்று உள்ளது.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்

## (பகுதி – 3)

3–1–7 பாக்தம் வா அநாத்மவித்த்வாத் ததா ஹி தர்சயதி

பொருள் – அந்த உபநிஷத் வேறு பொருளில் வந்துள்ளது. ப்ரஹ்மத்தைப் பற்றிய அறிவு இல்லாத காரணத்தினால், அந்த அதிகாரிகள், தேவர்களுக்கு உணவாகின்றனர். இதனையே ஸ்ருதி கூறுகிறது.

ஸித்தாந்தம் – (சூத்திரம் 3–1–6 இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது). சூத்திரத்தில் காணப்படும் – வா – என்ற பதம், கடந்த ஆக்ஷேபத்தை நிராகரித்தது. யாகம் போன்றவற்றை இயற்றுபவர்கள் (இஷ்ட அதிகாரிகள்) ஆத்மஞானம் அற்றவர்கள் ஆவர். ஆகவே அவர்கள் இந்த உலகில் உள்ளவரையில் யாகம் போன்றவற்றை இயற்றி வருகின்றனர். அவர்களால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள் அளித்த பலன் கொண்டு ஸ்வர்க்கம் செல்கின்றனர். அங்கு அந்தத் தேவதைகளால் அனுபவிக்கப்படும் பொருள்களாக மாறுகின்றனர். உதாரணமாக ப்ருஹத் உபநிஷத்(1–4–10) – பசு: ஏவம் ஸ தேவாநாம் – மனிதர்களுக்கு பசு பயன்படுவதுபோன்று, அவன் தேவர்களுக்கு பயன்படுகிறான் – என்று உள்ளது. இதன் மூலம், பரமாத்மாவைப் பற்றிய ஞானம் உள்ளவர்கள் ப்ரஹ்மத்தை அடைவதையும், அந்த ஞானம் அற்றவர்கள் தேவதைகளின் உபயோகப் பொருள்களாக உள்ளதையும் ஸ்ம்ருதி கூறுகின்றது. இதனை ஸ்ரீமத் பகவத் கீதை(7–23) – தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி – தேவதைகளை ஆராதிப்பவர்கள் அவர்களிடம் செல்கின்றனர், என்னை (க்ருஷ்ணனை) ஆராதிப்பவர்கள் என்னிடம் வந்தடைகின்றனர் – என்றது. எனவே ஜீவன் தேவர்களுக்கு உணவாகிறான் என்பதன் மூலம், அவன் அவர்களின் உபயோகப் பொருளாகிறான் என்பதே உணர்த்தப்பட்டது. எனவே அந்த உபநிஷத் வரி(பூர்வபக்ஷத்தில் உள்ள வரியானது), வேறு ஒரு பொருளில் கூறப்பட்டதாகும். ஆக தேவர்களுக்கு பணிவிடை செய்தபடி இருப்பது என்பதே, அவர்கள் ஸோமராஜாவை உணவாக உட்கொள்கின்றனர் என்று கூறப்பட்டது. இதனை சாந்தோக்ய உபநிஷத்(3–6–1) – ந வை தேவா: அச்நந்தி ந பிபந்தி ஏதத் ஏவ அம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி – தேவர்கள் உண்ணுவதில்லை, எதனையும் பருகுவதில்லை, அமிர்தத்தைக் கண்களால் பார்த்தபடியே மகிழ்வும் மனநிறைவும் கொள்கின்றனர் – என்றது. ஆக, ஜீவன் கிளம்பும்போது, பூதசூக்ஷமங்களுடனேயே கிளம்புகிறான் என்று நிருபிக்கப்பட்டது.

## அதிகாரணம் – 2 – க்ருதாத்யய அதிகரணம்

விஷயம் – ஸ்வர்க்கத்தில் இருந்து மீண்டும் கீழே இறங்கும் ஜீவன், தான் அனுபவிக்கவேண்டிய எஞ்சிய கர்மபலன்களுடனேயே வருகிறான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3–1–8 க்ருதாத்யயே அநுசயவாந் த்ருஷ்ட ஸ்ம்ருதிப்யாம் யதேதம் அநேவம் ச

பொருள் – கர்மபலன் அனுபவிக்கப்பட்ட பின்னர், கர்மபலனில் உள்ள மீதத்துடன் (எஞ்சிய கர்ம பலன்), ஜீவன் வருகிறான். இவ்விதமே ஸ்ருதியும் ஸ்ம்ருதியும் கூறுகிறது. ஒரு வழியில் சென்று மற்றொரு வழியில் திரும்புகிறான்.

பாஷ்யம் – ஸ்ம்ருதிகளில் கூறப்படுவது – யாகம் போன்ற புண்ணிய செயல்களைச் செய்தவர்கள் தூமாதி மார்க்கமாகத் தொடங்கி, பித்ரு மார்க்கம் அடைந்து, சந்திரமண்டலம் செல்கிறனர். அதன் பின்னர் (புண்ணிய பலன் கழிந்தவுடன்) மீண்டும் திரும்புகின்றனர் – என்பதாகும். இதனை சாந்தோக்ய உபநிஷத்(5–10–5) – யாவத் ஸம்பாதமுஷித்வாதைததமேவாத்வாநம் புநர் நிவர்த்தந்தே – கர்மபலன் உள்ளவரையில் ஸ்வர்க்கத்தில் வாழ்ந்து, அதன் பின்னர் உலகிற்குத் திரும்புகின்றனர் – என்று கருத்து.

ஆராயப்படும் விஷயம் – இவ்விதமாகத் திரும்பும் ஜீவன், தனது கர்மபலன்களின் எஞ்சிய பகுதியுடன் திரும்புகிறானா அல்லது கர்மபலன் முழுவதுமாகக் கழிந்து விடுகிறதா? (இந்த ஐயம் ஏற்படக் காரணம் – மறுபிறவியில் உண்டாகும் பிறப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும் கடந்த பிறவியின் கர்மபலன்கள் காரணமாக என்று கூறப்படுகிறது. அப்படி என்றால் அந்த ஜீவன் மீண்டும், வரும்போது கர்மபலன் சிறிதளவாவது இருக்க வேண்டும் அல்லவா?)

பூர்வபக்ஷம் – அனைத்துக் கர்மபலன்களையும் அனுபவித்து முடித்துவிட்டதால், எஞ்சிய கர்மபலனுடன் வருவதாகக் கூற இயலாது. சூத்திரத்தில் உள்ள அனுசயம் என்ற பதத்தின் பொருள் அனுபவித்த பின்னர் எஞ்சியுள்ள கர்மபலன் என்பதாகும். அனைத்துக் கர்மங்களையும் முழுவதுமாக அனுபவித்த பின்னர், மீதம் என்பது இருக்க வாய்ப்பில்லை. மேலும் சாந்தோக்ய உபனிஷத்தில்(5–10–5) – யாவத் ஸம்பாதம் உஷித்வா – கர்மம் உள்ளவரையில் ஸ்வர்க்கத்தில் வாழ்ந்து, அதன் பின்னர் திரும்புகின்றனர் – என்று கர்மம் முழுவதுமாக அனுபவிக்கப்பட்டதாகவே கூறப்பட்டது. ஸம்பாதம் என்ற பதம் எந்தக் கர்மத்தின் மூலம் ஸ்வர்க்கம் புகுந்தனரோ, அந்தக் கர்மம் ஆகும். இதனை ப்ருஹத் உபனிஷத்(4–4–6) – ப்ராப்யாந்தம் கர்மண: தஸ்ய யத்கிஞ்சேஹ கரோத்யயம் தஸ்மாத் லோகாத் புநரேத்யஸ்மை லோகாய கர்மணே – எந்த உலகில் உள்ளவரை எத்தக் கர்மங்களைச் செய்தானோ அந்தக் கர்மபலன்கள் உள்ளவரையில் ஸ்வர்க்கத்தில் இன்பம் அனுபவிக்கிறான், பின்னர் இந்த உலகத்தில் கர்மம் இயற்ற மீண்டும் திரும்புகிறான் – என்றது.

ஸித்தாந்தம் – இது தவறான வாதமாகும். அந்த ஜீவன் எஞ்சிய கர்மபலன்களுடன் திரும்புகிறான். இதனை எவ்விதம் கூற இயலும்? இவ்விதமே – த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் – ஸ்ருதியும் ஸ்ம்ருதியும் கூறுவதை அறியலாம். சாந்தோக்ய உபனிஷத்(5–10–7) – தத்ய இஹ ரமணீய சரணா அப்யாசோ ஹ யத் தே ரமணீயாம் யோநிம் ஆபத்யேரந் ப்ராஹ்மண யோநிம் வா க்ஷத்ரிய யோநிம் வா வைச்ய யோநிம் வா அத யே இஹ கபூயசரணா அப்யாஸோ ஹ யத் தே கபூயாம் யோநிம் ஆபத்ரயேந் ச்வயோநிம் வா சண்டாள யோநிம் வா – திரும்பி வருபவர்களில் புண்ணிய பலன்கள் மீதம் உள்ளவர்கள் ப்ராம்மணன், க்ஷத்ரியன், வைசியன் போன்ற பிறவிகளில் உயர்ந்த பிறவியை அடைகின்றனர், பாவ பலன்கள்: மீதம் உள்ளவர்கள் நாய், பன்றி, சண்டாளன் ஆகிய பிறப்பை எடுக்கின்றனர் – என்று கூறியது. ஆக மீண்டும் திரும்புபவர்கள், புண்ணிய கர்மபலன்கள் கொண்டு திரும்பும்போது ப்ராம்மணன் போன்ற பிறவி எடுக்கின்றனர். தாழ்வான கர்மபலன்(கபூய) உடையவர்கள் மீண்டும் வரும்போது சண்டாளன் போன்ற பிறவியை அடைகின்றனர்.

இதே கருத்தை ஸ்ம்ருதியான கௌதம ஸ்ம்ருதி (2–11–12,13) – வர்ணா: ஆச்ரமாச்ச ஸ்வகர்மநிஷ்டா: ப்ரேத்ய கர்மபலம் அனுபூய தத: சேஷேண விசிஷ்டதேச ஜாதிகுல ரூப ஆயு: ச்ருத வித்த வ்ருத்த ஸுக மேதஸ ஹி ஜந்ம ப்ரதிபத்யந்தே விஷ்வஞ்ச: விபரீதா நச்யந்தி – அவரவர்களின் வர்ணமும் (அந்தணன் போன்ற நான்கு வகை பிறப்பு) ,ஆச்ரமமும் (வாழ்க்கை நிலை – ஸங்ந்யாஸம் போன்ற நிலைகள்) அவரவர்களின் கர்மபலன் பொறுத்தே அமையும். இந்தப் பிறவி முடிந்து, தங்கள் கர்மபலனை சந்த்ரமண்டலத்தில் அனுபவித்துவிட்டு, எஞ்சிய கர்மபலனுடன் திரும்புகின்றனர், இதன் மூலம் புண்ணிய க்ஷேத்ரம், உயர்ந்தகுலம், உயர்ந்தஜாதி, நல்ல நடத்தை, நல்ல அழகு, தீர்க்கமான ஆயுள், தெளிவான ஞானம், நிறைந்த செல்வம், சுகம், மேதாவித்தனம் ஆகியவற்றைப் பெறுகின்றனர், மற்றவர்கள்(தங்கள் கர்மங்களைச் சரிவர இயற்றாதவர்கள்) அழிகின்றனர் – என்று கூறியது.

இது போன்று ஆபஸ்தம்ப தர்மசூத்திரம்(2.1.2,3) – தத: பரிவ்ருத்தௌ கர்மபல சேஷேண ஜாதிம் ரூபம் வர்ணம் பலம் மேதாம் ப்ரஜ்ஞாம் த்ரவ்யாணி தர்ம

அனுஷ்டாநம் இதி ப்ரதிபத்யந்தே தத் சக்ரவத் உபயோர் லோகயோ: ஸுக ஏவ வர்த்ததே – ஸ்வர்க்கத்தில் இருந்து திரும்பும்போது எஞ்சியுள்ள கர்மபலன் காரணமாக குலம், அழகான ரூபம், ஆயுள், மேதாவிலாஸம், புத்தி, செல்வம், தவறாத சாஸ்த்ர நடவடிக்கைகள் ஆகியவற்றில் சிறப்பாக உள்ளனர், சக்கரம் ஓடுவது போன்று இரண்டு இடங்களிலும்(பூமி, ஸ்வர்க்கம்) மகிழ்வுடன் உள்ளனர் – என்று கூறியது.

சாத்தோக்ய உபனிஷத்(5–10–5) கூறும் – யாவத் ஸம்பாதம் – என்பது பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களைக் குறிக்கும். ப்ருஹத் உபனிஷத்(4–4–6) கூறிய – யத் கிஞ்சேஹ கரோத்யம் – என்பதும் இதே பொருளில் கூறப்பட்டதாகும். மேலும், ஒருவன் தான் செய்த கர்மங்களுக்கான பலனை அனுபவிக்காமலும் அல்லது அதற்கு ஏற்ற ப்ராயச்சித்தம் செய்யாமலும் அந்தக் கர்ம பலன்கள் தொலையாது. அந்தக் கர்மபலன்களுக்குப் பதிலாக வேறு கர்மபலன்களை அனுபவிப்பது என்று கூறுவதும் எவ்வகையிலும் பொருந்தாது. ஆகவே ஸ்வர்க்கம் சென்றவர்கள், மீண்டும் திரும்பும் போது, கர்மபலன்களின் மீதத்துடன்(எஞ்சிய கர்மபலன்), தாங்கள் சென்ற பாதை வழியாகவே திரும்புகின்றனர் என்று கருத்து. மேலே கிளம்பும் போது – தூமம்(புகை), இரவு, க்ருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம், பித்ரு லோகம், ஆகாயம், சந்திரன் என்னும் பாதையில் செல்கின்றனர். கீழே இறங்கும் போது ஆகாயம், காற்று, தூமம், மேகம், மழை என்ற பாதையில் இறங்குகின்றனர். ஆக இறங்கும் போது – யதேதம் – வாயு போன்றவற்றை அடைகின்றனர், பித்ருலோகத்தை அடைவதில்லை.

### 3–1–9 சரணாத் இதி சேத் ந தத் உபலக்ஷணார்த்தா இதி கார்ஷ்ணாஜிநி:

பொருள் – ஆசாரம்(ஒழுக்கம்) என்பதே சரண என்ற பதம் மூலம்(கடந்த சூத்திரத்தில் உள்ள கபூயசரணா, ரமணீயசரணா போன்ற பதங்கள்) கூறப்பட்டது, அவை குறிப்பது கர்மத்தை அல்ல – என்று ஆக்ஷேபிப்பது சரியில்ல – அந்தப் பதங்கள் கர்மங்களைக் குறிப்பதாகவே கார்ஷ்ணாஜிநி முனிவர் கூறுகிறார்.

பூர்வபக்ஷம் – கடந்த சூத்திரத்தில் கூறப்பட்ட உபநிஷத் வரிகளில் உள்ள – ரமணீய சரணா, கபூய சரணா போன்ற பதங்களில் காணப்படும் சரணா என்ற பதம் புண்ணியபாவக் கர்மங்களைக் கூறுவில்லை. இந்த உலகில் உள்ளவர்கள் சரணம், ஆசாரம்(ஒழுக்கம்), சீலம்(பண்பு), வ்ருத்தம்(நடவடிக்கை) ஆகியவற்றை ஒரே பொருள் உள்ளவையாகவே கூறுகின்றனர். மேலும் வேதமும்(தைத்திரீய ஸம்ஹிதை: 1–11–2) – யாநி அநவத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி நோ இதராணி யாநி அஸ்மாகம் ஸுசரிதாநி தாநி த்வயா உபாஸ்யாநி – தோஷம் இல்லாத கர்மங்கள் மட்டுமே செய்யப்படவேண்டும், மற்றவை அல்ல, நன்மை பயக்கும் கர்மங்களே உன்னால் இயற்றப்படவேண்டும் – என்று உள்ளது. இந்த வரியில் கர்மம் என்ற பதம் தவிர்த்து, சரணம் என்பது(சரிதம் என்று உள்ளது), தனியாகவே கூறப்பட்டது காண்க. ஆகவே நல்ல கர்மங்கள் காரணமாகவே சிறந்த பிறவி அடைகிறான், எஞ்சிய கர்மபலன் காரணமாக அல்ல என்றே கூறவேண்டும்.

ஸித்தாந்தம் – அப்படி அல்ல. சரண என்ற பதத்துடன் கூடிய ஸ்ருதி வரியானது, புண்ணிய–பாவ கர்மங்களைக் குறிப்பதாகவே கார்ஷ்ணாஜிநி என்ற முனிவர் கூறுகிறார். இதன் காரணம், வெறும் ஆசாரம் ஆகியவற்றைக் கொண்டு மட்டுமே ஒருவன் இன்பமும் துன்பமும் அனுபவிக்கிறான் என்று கூற இயலாது. இன்ப துன்பங்கள் என்பவை, புண்ணிய–பாவ கர்மங்களே ஆகும்.

### 3–1–10 ஆநர்த்தக்யம் இதி சேத் ந தத் அபேக்ஷத்வாத்

பொருள் – (ஆசாரம் மூலம் இன்பதுன்பம் ஏற்படவில்லை என்றால்) இந்த ஆசாரம் பயனற்றதாகிவிடுமே, இவ்விதம் வாதம் செய்வது சரியல்ல – காரணம் புண்ணியபாவ கர்மங்கள் அதனையே சார்ந்துள்ளன.

பூர்வபக்ஷம் – ஆசாரம் மூலம் இன்பதுன்பங்கள் விளையாது என்றால்(சூத்திரம் 3–1–9 ஸித்தாந்தம் இவ்விதம் கூறியது), ஸ்ம்ருதிகளில் கூறப்பட்ட ஆசாரம் என்பது பயனற்றதாகி விடும் அல்லவா? – காரணம் அவை எந்தப் பலனையும் உண்டாக்குவதில்லை என்றாகிவிடுகிறதே.

ஸித்தாந்தம் – அப்படி அல்ல. ஆசாரம் என்பதே புண்ணிய கர்மங்களின் அடிப்படை ஆகிறது. ஆசாரம் உள்ளவன் மட்டுமே புண்ணிய கர்மங்கள் இயற்றும் தகுதியைப் பெறுகிறான். இதனைப் பின் வரும் வரிகள் மூலம் அறியலாம்:

தக்ஷ ஸ்ம்ருதி(2–27) – ஸந்த்யாஹீந: அசுசி: நித்யம் அநர்ஹ: ஸர்வ கர்மஸ ு – ஸந்த்யாவந்தனம் செய்யாதவன் அசுத்தமானவன், அவன் எந்தக் கர்மத்தையும் இயற்றும் தகுதி அற்றவன்.

வசிஷ்ட ஸ்ம்ருதி(6–3) – ஆசாரஹீநம் ந புநந்தி வேதா: – ஆசாரம் இல்லாதவனை வேதங்களாலும் தூய்மைப்படுத்த இயலாது.

எனவே சரண என்ற பதம் புண்ணிய–பாவ கர்மங்களையே குறிக்கிறது என்று கார்ஷ்ணாஜிநி கூறுவது பொருத்தமே ஆகும்.

3–1–11 ஸுக்ருத துஷ்க்ருதே ஏவ இதி து பாதரி:

பொருள் – சரண என்ற பதம் புண்ணிய–பாவ கர்மங்களைக் குறிப்பதாகவே பாதரி கூறுகிறார்.

பாஷ்யம் – புண்யம் கர்ம ஆசரதி பாபம் கர்ம அசரதி – புண்ணிய கர்மங்களை இயற்றுகிறான், பாவக் கர்மங்களை இயற்றுகிறான் – என்று கூறுவதை நாம் பார்த்திருக்கிறோம். இங்கு சரதி என்ற பதம் உள்ளது காண்க. எனவே சரண என்ற பதம், கர்மத்தைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும் என்று பாதரி கூறுகிறார். ஒரு பதத்திற்கு நேரடியான பொருள் கூற முடிந்தது என்றால், மறைமுகமான பொருளை அந்தப் பதம் மூலம் உணர்த்துதல் கூடாது.

இங்கு ஓர் ஐயம் ஏற்படலாம் – சரண என்ற பதமும், கர்மம் என்ற பதமும் ஒரே பொருள் என்றால் ஏன் அவை தனித்தனியாகக் கூறப்பட்டன(சூத்திரம் 3–1–9ல் உள்ள – யாநி அநவத் யாநி கர்மாணி, யாநி அஸ்மாகம் ஸுசரிதாநி – என்ற வரி காண்க)? இதனை இப்போது விளக்குகிறார். யாநி அநவத் யாநி கர்மாணி – என்பதன் மூலம் ஸ்ருதிகளில் நேரடியாகக் கூறப்பட்ட கர்மங்கள் உணர்த்தப்பட்டன. ஆனால் – யாநி அஸ்மாகம் ஸுசரிதாநீ – என்பதன் மூலம் ஸ்ருதிகளில் அந்தக் கர்மங்கள் கூறப்படவில்லை என்றாலும், ஆசாரம் மூலமாகக் கூறப்பட்டன. இது போன்று நாம் கோபலீவர்த்தந்யாயம் மூலம் அறியலாம் (இது என்ன? ஒரு முதலாளி ஒருவனிடம் – நீ போய் மாடுகளை அழைத்து வா, நீ போய் எருதுகளை அழைத்து வா – என்றான். மாடு என்பதிலேயே எருதும் அடங்கி விடும்போது ஏன் தனியாகக் கூறவேண்டும்? எருதுகளைச் சிறப்பித்துக் கூற வேண்டும் என்பதற்காக இவ்விதம் கட்டளை இட்டதாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் மாடு என்ற பதத்தால், எருது குறிக்கப்படவில்லை என்று உணர வேண்டும்).

இங்கு சூத்திரக்காரர் முடிவும், பாதரியின் முடிவும் ஒன்றே ஆகும். கார்ஷ்ணாஜினியின்(கடந்த சூத்திரம்) முடிவைப் பொறுத்தவரை – ஸந்த்யாவந்தனம் போன்ற ஆசாரங்கள், மற்ற கர்மங்களை இயற்றும் தகுதியை ஏற்படுத்தக் கூடியவை – என்று அளவில் மட்டுமே சூத்திரக்காரர் ஏற்றார். ஆகவே கீழே இறங்கும் ஜீவன் எஞ்சிய கர்மபலனுடனேயே வருகிறான் என்பது தெளிவாகிறது.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 3)

## அத்யாயம் – 2 – ஸாரநிஷ்கர்ஷாதிகாரம்

ஸ்ருதி பத விபரீதம் க்ஷ்வேள கல்பம் ஸ்ருதௌ ச
ப்ரக்ருதி புருஷ போக ப்ராபக அம்ச: ந பத்ய:
தத் இஹ விபுத குப்தம் ம்ருத்யுபீதா விசின்வந்தி
உபனிஷத் அம்ருத அப்தே: உத்தமம் ஸாரமார்யா:

பொருள் – வேத மார்க்கத்திற்கு மாறாகப் பொருள் உரைக்கும் அனைத்து மதங்களுமே விஷத்திற்குச் சமம் ஆகும். வேதங்களில் கூட, இந்த உலக விஷயங்களை அடையும் பொருட்டும், தனது ஆத்மாவையே அனுபவிக்கும் (கைவல்யம்) பொருட்டும் கூறப்படும் பகுதிகள் அனைத்தும் உயர்ந்தவை அல்ல. ஆகவே, ஸம்ஸாரம் என்னும் பிறப்பு–இறப்பைக் கண்டு அச்சம் கொள்ளும் அறிவாளிகள், உபனிஷத்துகள் என்ற கடலைக் கடைந்து எழும் சாரம் (ரஹஸ்யத்ரயம் = திருமந்த்ரம், சரமச்லோகம், த்வயம்) என்ற அமிர்தத்தையே பருக விரும்புவர். இந்த அமிர்தத்தை, நமது ஆசார்யர்கள், நமது நன்மைக்காக மிகுந்த பாடுபட்டு காப்பாற்றி வருகின்றனர்.

<u>மூன்று மந்த்ரங்களின் உயர்வு</u>

இந்த ரஹஸ்யத்ரயத்தில் திருமந்த்ரம் ஸர்வமஷ்டாக்ஷராந்த: ஸ்தம் என்கிறபடியே தன் அர்த்தத்தை அறிய எல்லா அர்த்தங்களையும் அறிந்து தரும்படியாயிருக்கையாலும், சரமச்லோகம் ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்று தான் சொல்லுகிற உபாயம் ஒன்றையுமே அவலம்பிக்க ஸர்வோபாய பலஸித்தி உண்டாம் என்று ஸ்தாபிக்கையாலும், த்வயமும் கட ஸ்ருத்யாதிகளில் சொல்லுகிறபடியே தன்னை ஒரு கால் உச்சரித்தவனை ஸர்வப்ரகாரத்தாலும் க்ருதக்ருத்யனாக்க வல்ல வைபவத்தை உடைத்தாயிருக்கையாலும் ரஹஸ்ய த்ரயமே முமுக்ஷுக்களுக்கு ஆதரணீயம்.

விளக்கம் – ரஹஸ்யத்ரயம் என்னும் மூன்று மந்த்ரங்களில், திருமந்த்ரம்(அஷ்டாக்ஷரம்) என்பது மற்றவற்றின் பொருளையும் தன்னுள் கொண்டது ஆகும். இதன் பொருளை உணர்ந்தால், அனைத்தையும் உணர்ந்தது ஆகும். இதனை நாரதீய கல்பம் (1–9) – ஸர்வமஷ்டாக்ஷராந்த: ஸ்தம் – அனைத்தும் அஷ்டாக்ஷரத்தில் உள்ளது – என்றது. சரமஸ்லோகம் – ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ – மோக்ஷத்திற்கான அனைத்து உபாயங்களையும் கைவிட்டு என்னிடம் அடைக்கலம் புகுவாய் – என்று ஒரே பாதையைக் கடைபிடிக்க வேண்டும், இந்தப் பாதை சரணாகதி என்னும் பாதையாகும் என்பதைக் கூறுகிறது, இந்தப் பாதை மற்ற அனைத்து பாதைகளின் பலனையும் அளிக்க வல்லது. த்வயம் என்பது கட உபனிஷத்தில் கூறப்படுவது போல், தன்னை ஒரு முறை உச்சரித்தவனை, அவன் அனைத்து கர்மங்களையும்(மோக்ஷம்

பெறுவதற்கான கர்மம்) சிறப்பாக முடிக்கும்படிச் செய்கிறது. ஆகவே முமுக்ஷுக்களுக்கு இந்த ரஹஸ்யத்ரயமே சிறந்தது.

## சாஸ்த்ரங்களே மோக்ஷத்திற்குப் ப்ரமாணம்

அஸரம் அல்பஸாரம் ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத்
பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே (ஸ்த்ரம்) ரத்னாகர இவாம்ருதம்

பொருள் – பயனே இல்லாதவற்றையும், அற்பமான பயன் அளிப்பவற்றையும், சிறிது பலன் அளிப்பவற்றையும், சற்றே அதிக பலன் அளிப்பவற்றையும் துறக்க வேண்டும், சாஸ்த்ரங்களில் அம்ருதம் போன்ற மிக உயர்ந்த கருத்தை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

பரமபுருஷார்த்தமும் ததுபாயமும் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் அறியவொண்ணாத படியாலே இவற்றுக்கு – சாஸ்த்ராத் வேதிந ஜனார்த்தனம் என்றும், தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாண்யம் கார்ய அகார்ய வ்யவஸ்திதௌ என்றும், சப்தப்ரஹ்மணி நிஷ்ணாத: பரம் ப்ரஹ்மாதிகச்சதி என்றும் சொல்லுகிறபடியே சப்தமே ப்ரமாணம்.

விளக்கம் – வாழ்க்கையின் மிக உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷம் என்பதும், அதனை அடையும் உபாயமும், கண்ணால் காணபதாலோ(ப்ரத்யக்ஷம்) அல்லது அனுமானம் செய்வதாலோ புரிந்து கொள்ள இயலாது. பின் வரும் வரிகளின் மூலம் சாஸ்திரமே இவற்றுக்குப் ப்ரமாணம் என்று அறிந்து கொள்ளலாம்:

- மஹாபாரதம் உத்யோக பர்வம்(68–5) – சாஸ்த்ராத் வேதிந ஜனார்த்தனம் – சாஸ்த்ரம் மூலம் ஜனார்த்தனனை நான் அறிகிறேன்.
- ஸ்ரீமத் பகவத் கீதை(16–24) – தஸ்மாத் சாஸ்திரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய வ்யவஸ்திதௌ – எதனைச் செய்ய வேண்டும், எதனைச் செய்யக் கூடாது என்று உனக்கு வழிகாட்டியாக சாஸ்த்ரமே உள்ளது.
- மஹாபாரதம் சாந்தி பர்வம்(276–2) – சப்தப்ரஹ்மணி நிஷ்ணாத: பரம் ப்ரஹ்மாதிகச்சதி – சப்தம் எனப்படும் வேதங்களை அறிந்தவன், ப்ரஹ்மத்தை(ப்ரஹ்மம் என்பது ஸ்ரீமன் நாராயணனைக் குறிக்கும்) அறிந்தவன் ஆகிறான்.

அவ்விடத்தில்

அனந்தபாரம் பஹு வேதிதவ்யம் அல்பச்ச காலோ பகவச்ச விக்னா:
யத்ஸாரபூதம் ததுபாததீத ஹம்ஸோ யதா க்ஷீரம் இவ அம்புமிச்ரம்

என்கிற ச்லோகத்தில் ஸாரபூதம் என்கிற பதத்தாலே ப்ரதிபந்நமான நிருபாதிகஸாரத்தை விஷயீகரிக்கிற ஸாரதமசப்தம் உபாதேயம். பாஹ்ய குத்ருஷ்டி சாஸ்த்ரங்கள் அத்யந்தா ஸாரங்களாகையாலே அனுபாதேயங்கள். வேதத்தில் பூர்வபாகத்தில் ஐஹிகபலஸாதன ப்ரதிபாதகமான ப்ரதேசம் அத்யல்ப ஸாரமாகையாலே அனுபாதேயம். ஆமுஷ்மிகபல ப்ரதிபாதகாம்சம் ஐஹிக பலத்திற்காட்டில் அதிசயித பலத்தை உடைத்தாகையாலே சிலர்க்கு ஸாரம் என்னவாயிருந்ததேயாகிலும் துக்கமூலத்வாதி தோஷ த்ருஷ்டமாகையாலே அனுபாதேயம். ஆத்மதத்ப்ராப்தி தத்ஸாதனமாத்ரத்தை ப்ரதிபாதிக்கும் அம்சமும் ஸாரதரமாய் இருந்ததேயாகிலும் அதிலும் அத்யந்தாதிசயிதமான பரமாத்மானுபவ ஸாபேக்ஷர்க்கு அனுபாதேயம். பரமாத்ம தத்ப்ராப்தி ததுபாயங்களை வெளியிடும் ப்ரதேசம் ஸாரதமமாகையாலே விவேகிக்கு உபாதேயம்.

விளக்கம் – மேலும் உத்தவ கீதை(3–10) – அனந்தபாரம் பஹு வேதிதவ்யம் அல்பச்ச காலோ பகவச்ச விக்னா: யத்ஸாரபூதம் ததுபாததீத ஹம்ஸோ யதா க்ஷீரம் இவ அம்புமிச்ரம் – நமக்குத் தெரிய வேண்டியது பல உள்ளது, எல்லையற்றது, இதனை அறிய இருக்கும் காலமோ மிகவும் குறைவானது, தடங்கல்கள் பல உள்ளது, ஆகவே அன்னம் எவ்விதம் நீரிலிருந்து பாலை பிரிக்கிறதோ அது

போன்று, உயர்ந்ததை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கு உயர்ந்தது என்றால் மிக உயர்ந்தது என்று பொருள் கொள்ளவேண்டும். வேதங்களில் சேராத சாஸ்த்ரங்களும், வேதங்களை மறுத்துக் கூறும் சாஸ்த்ரங்களும் உயர்ந்தவையே அல்ல, எனவே அவை தள்ளப்பட வேண்டியவை ஆகும். வேதத்தின் முதல் பாகமாகிய(பூர்வ பாகம்) கர்ம காண்டத்தில், உலக விஷயங்களைப் பெற உதவும் கர்மங்களைக் கூறும் பகுதிகள் உயர்ந்தவை அல்ல, ஆகவே அவற்றைத் தள்ளலாம். உலக விஷயங்களைவிடச் சற்றே உயர்வாகத் தோன்றும் ஸ்வர்க்கம் முதலானவற்றைப் பெற உதவும் பகுதிகளும் துன்பம் முதலானவற்றிலேயே இறுதியில் முடிவதால், அவையும் பயனற்றதே. இதனை விடச் சற்றே உயர்வாகத் தோன்றுகின்ற, ஆத்மாவைப் பற்றி அறிய உதவும் பகுதிகளும் அதனை அடையும் உபாயம் கூறும் பகுதிகளும், பரம்பொருளை மட்டுமே அரிய ஆவல் கொண்ட மனிதர்களுக்கு முக்கியமாகப் படுவதில்லை. ஆக விவேகம் கொண்ட மனிதன் ஒருவனுக்கு, பரப்ரஹ்மம் பற்றிக் கூறும் வேத பகுதிகளும், ப்ரஹ்மத்தை அடையும் உபாயம் பற்றிக் கூறும் பகுதிகளும் மிகவும் முக்கியமானதாகும். எனவே அவற்றைக் கைக்கொள்ள வேண்டும்.

அவ்வம்சத்திலும் ப்ரதானப்ரதிதந்த்ரங்களான தத்த்வ ஹிதங்களுடைய ஸங்க்ரஹமாகையாலே மிகவும் ஸாரதம (உபாதேய) மாயிருக்கும் ரஹஸ்யத்ரயம். ஆகையால்,

> பஹுப்யச்ச மஹத்ப்யச்ச சாஸ்த்ரேப்யோ மதிமாந்நர:
> ஸர்வதஸ்ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத:

என்கிறபடியே ரஹஸ்யத்ரயம் முமுக்ஷுவான இவ்வாத்மாவுக்கு மிகவும் உபாதேயமாகக் கடவது.

விளக்கம் – அவற்றிலும், அறியப்படவேண்டிய தத்துவங்களாக உள்ளவையும், மோக்ஷ உபாயமாக உள்ளவையும், தனித்து விளங்குபவையும், நமது ஸித்தாந்தத்தின் அடிப்படையாக உள்ளதும் ஆகிய மூன்று ரஹஸ்யங்களும் மிகவும் முக்கியமானவையாகும். மஹாபாரதம் சாந்தி பர்வம்(176–66) – பஹுப்யச்ச மஹத்ப்யச்ச சாஸ்த்ரேப்யோ மதிமாந்நர: ஸர்வதஸ்ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத: – பல உயர்ந்த சாஸ்த்ரங்களில் இருந்து விவேகம் உள்ள மனிதன், தேனீ எவ்விதம் மலர்களில் உள்ள மகரந்தத்தை மட்டும் எடுக்கிறதோ, அது போன்று முக்கியமானவற்றை மட்டுமே எடுக்க வேண்டும். ஆக மோக்ஷத்தில் விருப்பம் உள்ள ஜீவன்(முமுக்ஷு), இந்த மூன்று மந்த்ரங்களையே நாடவேண்டும்.

அமையா இவை என்னும் ஆசையினால் அறு மூன்று உலகில்
சுமையான கல்விகள் சூழ வந்தாலும் தொகை இவை என்று
இமையா இமையவர் ஏத்திய எட்டு இரண்டு எண்ணிய – நம்
சமயாசிரியர் சதிர்க்கும் தனி நிலை தந்தனரே.

பொருள் – இதுவரை கற்றது போதாது என்று ஆசையால் நாம் மேலும் 18 பிரிவுகளை கற்கக் கூடும்(18 பிரிவுகள் = 4 வேதங்கள், சிக்ஷை, வ்யாகரணம், ஸந்தஸ், நிருக்தம், ஜோதிடம், கல்பம், மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்மம், ஆயுர்வேதம், தனுர் வேதம், காந்தர்வம் மற்றும் அர்த்த சாஸ்த்ரம்). இவை வெறும் எண்ணிக்கை மட்டும் அன்றி, நமக்குச் சுமையாகவும் ஆகிவிடும். ஆகவே, இமைக்காத கண்களை உடையவர்களும் சிறந்த ஞானம் உள்ளவர்களும் ஆகிய நித்யசூரிகள் துதிக்கும் அஷ்டாக்ஷரத்தையும், மற்ற இரண்டையும்(த்வயம், சரமஸ்லோகம்) நமது ஆசார்யர்கள் நமக்கு அளித்தனர்.

சாகாநாம் உபரி ஸ்திதேந மனுநா மூலேந லப்த ஆத்மக:
ஸத்தாஹேது ஸக்ருத் ஜபேந ஸகலம் காலம் த்வயேந க்ஷிபந்
வேத உத்தாம்ஸ விஹார ஸாரதி தயாகும்பேந விஸ்ரம்பித:
ஸாரஜ்ஞோ யதி கச்சித் அஸ்தி புவநே நாத: ஸயூதஸ்ய ந:

பொருள் – வேதங்களின் மேல் பாகமான உபனிஷத்துக்களில், மூல மந்த்ரமான அஷ்டாக்ஷரம் ப்ரகாசிக்கிறது. விவேகம் கொண்ட ஒருவன் இந்த அஷ்டாக்ஷரம் மூலமாகத் தனது உண்மையான தன்மையை அறிந்தாலோ, தனது வாழ்நாள் முழுவதும் த்வய மந்த்ரத்தைக் கூறிக் கொண்டு இருந்தாலோ, ஒரு முறை மட்டுமே

கூறினாலும் வாழ்வின் மிக உயர்ந்த புருஷார்த்தத்தை அளிக்கவல்ல த்வயத்தைக் இவ்விதம் கூறினாலும், தனது லீலைக்காகவே தேரோட்டியாக நின்றவனும், வேதங்கள் அனைத்திற்கும் மகுடம் போன்றவனும் ஆகிய கண்ணன் தனது கருணை காரணமாக உபதேசித்த சரமச்லோகத்தின் மீது மஹாவிச்வாசம் உள்ளவனும் – இப்படிப்பட்டவன் நமது கூட்டம் அனைத்திற்கும் ஸ்வாமி போன்றவன்.

## ஸாரநிஷ்கர்ஷ அதிகாரம் முற்றிற்று

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம் (பகுதி – 3)

7. ஸகல சாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயமார்ஜிதம் போலே, திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம் பைத்ருக தநம் போலே.

அவதாரிகை – இப்படி சிஷ்யனாய் நின்று இம்மந்த்ரசிக்ஷை பண்ணி இவ்வழியாலே ஜ்ஞாநம் பிறக்கவேணுமோ? ஞானக்கலைகள் என்கிறபடியே ஸகலசாஸ்த்ரங்களும் ஜ்ஞாநஸாதநமாயன்றோ இருப்பது. அவற்றை அப்யஸித்து அவ்வழியாலே ஜ்ஞாநம் பிறந்தாலோ? என்ன, சாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்துக்கும், இம்மந்த்ர ஜந்யஜ்ஞாநத்துக்கும் உண்டான விசேஷத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச் செய்கிறார் – ஸகலசாஸ்த்ரங்களாலும் என்று தொடங்கி.

விளக்கம் – இங்கு ஒரு சந்தேகம் எழலாம் – ஞானம் பெறுவதற்கு இவ்விதமாக சிஷ்யனாய் நின்று, இந்த மந்த்ரத்தைக் கற்கவேண்டுமா? திருவாய்மொழி (1–9–8) – ஞானக் கலைகள் – என்று கூறுவது போல் அனைத்து சாஸ்த்ரங்களும் ஞானத்தை உண்டாக்கவல்ல உபாயமாகவே உள்ளன அல்லவா? இதற்கு விடையாக – சாஸ்த்ரங்கள் கற்பதன் மூலம் ஏற்படும் ஞானத்திற்கும், இந்த மந்த்ரத்தின் மூலம் ஏற்படும் ஞானத்திற்கும் உள்ள வேறுபாட்டை ஓர் உதாரணம் மூலம் விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது – தத்வஜ்ஞாந ஜநகங்களான ச்ருதி ஸ்ம்ருத்யாதி ஸகலசாஸ்த்ரங்களாலும் சேதநருக்குப் பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயம் ஆர்ஜித தநம் போலே அத்யாயாஸலப்யமாயிருக்கும் – என்கை. சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேஸம் புத்தேச்சலநகாரணம் உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வ கர்மஸு என்னக்கடவதிறே. இத்தால், சாஸ்த்ரங்களிற்காட்டில் தத்ஸங்க்ரஹமான திருமந்த்ரத்துக்கு உண்டான வைபவம் சொல்லிற்றாயிற்று.

விளக்கம் – ச்ருதி, ஸ்ம்ருதி போன்ற ஞானம் ஏற்படுத்தவல்ல சாஸ்த்ரங்கள் அனைத்தும் ஜீவனுக்கு அறிவை உண்டாக்கும் என்பது உண்மையே. ஆனால் அந்த அறிவு என்பது தானே, தனது சொந்த முயற்சியில் செல்வம் சம்பாதிப்பது போன்று சிரமம் நிறைந்ததாகும். ஆனால் ஆசார்யனின் உபதேசம் மூலமாகக் கிடைக்கப் பெறும் திருமந்த்ரத்தால் பிறக்கும் ஞானமானது, முன்னோர் சேர்த்து வைத்த செல்வம் போன்று மிகவும் எளிதாக கிடைக்கும் ஒன்றாகும். சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேஸம் புத்தேச்சலநகாரணம் உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வ கர்மஸு – சாஸ்த்ரங்கள் மூலம் ஏற்படும் ஞானமானது மிகவும் சிரமமானது, புத்தியைக் கலங்கச் செய்வது ஆகும், எனவே நாராயணனை உபதேசம் மூலம் தனது உபாயம் என்று அறிந்து கொண்டு சாஸ்த்ரங்கள் மூலமாக ஞானம் ஏற்படுத்தவல்ல செயல்களைக் கை விட வேண்டும் – என்று கூறப்பட்டது. இதன் மூலம் சாஸ்த்ரங்களின் சுருக்கமாக உள்ள திருமந்த்ரத்திற்கு, சாஸ்த்ரங்களை விட அதிக மேன்மை கூறப்பட்டது.

8. பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள்

அவதாரிகை – ஆனால் சாஸ்த்ரங்களொழிந்தாகிறது, பகவந் மந்த்ரந்தான் இதொன்றுமன்றே, பின்னையும் பலவில்லையோ? என்கிற சங்கையிலே. மந்த்ராந்தரங்களிற்காட்டில் இதுக்கு உண்டான வைபவத்தை அருளிச்செய்வதாகத் திருவுள்ளம் பற்றி – பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள் – என்றார்.

விளக்கம் – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம். சாஸ்த்ரங்களை ஞானம் பிறப்பதற்காகக் கற்காமல் விடுவது போகட்டும். எம்பெருமானைக் கூறும் மந்த்ரங்கள் திருமந்த்ரம் மட்டும் அல்லவே, பல மந்த்ரங்கள் உள்ளனவே. அவற்றின் மூலம் ஞானம் ஏற்படலாம் அல்லவா? இதற்கு விடையாக, பல மந்த்ரங்கள் இருந்தாலும், அவற்றைக் காட்டிலும் திருமந்த்ரத்திற்குப் பெருமை அதிகம் என்பதை விளக்குகிறார்.

வ்யாக்யானம் – ஆஸ்தாம் தே குணராவிசத் குணாபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா, பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே, தவாநந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா:, பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந – என்றும், எண்ணில் தொல்புகழ் – என்றும், எந்நின்ற யோனியுமாய் பிறந்தாய் – என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே பகவத் குணங்களும், குணபரீவாஹரூபங்களான அவதாரங்களும் அஸங்க்யாதமாயிருக்குமாபோலே. அவற்றை அனுபந்தித்திருக்கும் மந்த்ர விசேஷங்களும் அநந்தா வைபகவந்மந்த்ரா: என்கிறபடியே அநேகங்களாயிருக்கும் என்கை.

விளக்கம் – கீழே உள்ள பல வரிகள் காண்க.

- ஸ்ரீரங்கராஜ ஸ்தவம்(2-74) – ஆஸ்தாம் தே குணராவிசத் குணா பரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா – ஸ்ரீரங்கநாதா, எல்லையற்ற உனது கல்யாணகுணங்களைப் போலவே, அந்தக் குணங்களை உணர்த்தும் உனது அவதாரங்களும் எண்ணிக்கையற்றவை.

- இராமாயணம், அயோத்யா காண்டம்(2-26) – பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே – தசரதனே, உனது புத்திரனுக்குப் பல கல்யாணகுணங்கள் உள்ளன.

- விஷ்ணு தர்மம் – தவாநந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா: – எண்ணிக்கையற்ற குணங்கள் உனக்கு இருந்தாலும், ஆறு குணங்களே முக்கியமானவை.

- ஸ்ரீமத் பகவத் கீதை(4-5) – பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந – அர்ஜுனா, உனக்கும் எனக்கும் எண்ணற்ற பிறப்புகள் கடந்து விட்டன.

- திருவாய்மொழி(3-3-3) – எண்ணில் தொல் புகழ்

- திருவிருத்தம்(1) – எண்ணின்ற யோநியுமாய் பிறந்தாய் – பல பிறவிகளிலும் பிறந்தாய்.

இது போன்று பல வரிகளில் கூறியபடி பகவானது குணங்களும், அந்தக் குணங்களை வெளிப்படுத்தும் அவனது அவதாரங்களும் எண்ணற்று உள்ளன. இது போன்றே இவற்றைப் (குணங்கள் மற்றும் அவதாரங்களை) புகழும் மந்த்ரங்களும் – அனந்தா வை பகவந் மந்த்ரா – என்பது போல் எண்ணற்றவையாக உள்ளன.

9. அவைதான், வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம்

அவதாரிகை – அவையெல்லாந்தான் ஏகவர்க்கமோ? என்ன. அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம் என்கிறார்.

விளக்கம் – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – இந்த பகவத் மந்த்ரங்கள் அனைத்தும் ஒரே வகைதானா அல்லது பல வகைப்பட்டதா? அவை வ்யாபகம் மற்றும் அவ்யாபகம் என இரு வகைப்படும் என்றார் .

வ்யாக்யானம் – அதாவது ஸர்வவ்யாபகமான பகவத் ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே வ்யாபகங்களென்றும், பகவத் அவதார குணா சேஷ்டிதங்களில் ஓரொன்றை ப்ரதிபாதிக்கையாலே அவ்யாபகங்களென்றும் உபயவர்க்கமாயிருக்கும் – என்கை.

விளக்கம் – மந்த்ரங்கள் பகவானுடைய ஸ்வரூபத்தை, அவன் எங்கும் பரவி உள்ளதை(வ்யாபித்து உள்ளதை) விளக்குவதால், வ்யாபக மந்த்ரங்கள் என்றும், அவை அவனுடைய அவதாரங்களின் போது அவனுக்குப் பொருந்தியுள்ள குணங்களையும் செயல்களையும் தனித்தனியே கூறுவதால் அவ்யாபகம் என்றும் இரண்டு வகைப்படும்.

10. அவ்யாகபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்

அவதாரிகை – வர்க்கத்வயமும் தன்னிலோக்குமோ? என்ன, அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள் என்கிறார்.

விளக்கம் – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – இந்த இரண்டு வகைகளும்(வ்யாபக மந்த்ரங்கள், அவ்யாபக மந்த்ரங்கள்), ஒரே தன்மை கொண்டவையா? இதற்கு விடையாக அவ்யாபக மந்த்ரங்களை விட, மூன்று வ்யாபக மந்த்ரங்கள் மேன்மையானவை என்றார்.

வ்யாக்யானம் – அதாவது, அவ்யாபகங்களாய் இருந்துள்ள ஸகல மந்திரங்களிலும் – நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் என்று விஷ்ணு காயத்ரியில் ஓதப்படுகிற வ்யாபக மந்த்ரங்கள் மூன்று ச்ரேஷ்டங்களாயிருக்கும் – என்கை. இந்த விஷ்ணு காயத்திரியிலே நாராயண வாஸுதேவ விஷ்ணு சப்தங்கள் அந்த மந்த்ர த்ரயத்துக்கும் ப்ரதாநபூத நாமத்ரயங்களாகையாலே, ஸாதாரண ப்ரணவ நமஸ்ஸுக்களோடே கூடின மந்த்ர த்ரயத்துக்கும் உபலக்ஷணமாகக் கடவது.

விளக்கம் – அவ்யாபக மந்த்ரங்களாக உள்ள அனைத்து மந்த்ரங்களை விட தைத்திரீய உபனிஷத் கூறும் – நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்– என்னும் விஷ்ணு காயத்ரி மூலம் கூறப்படும் மூன்று வ்யாபக மந்த்ரங்கள் மிகவும் உயர்ந்தவையாகும். இந்த விஷ்ணு காயத்ரியின் பொருள் – நாராயணனை அடைய நாம் விருப்பம் கொள்கிறோம், அதற்காக வாஸுதேவனை உபாசிக்கிறோம், இந்த த்யானத்தை விஷ்ணு மேம்படுத்த வேண்டும் – என்பதாகும். இந்த காயத்ரியில் உள்ள நாராயண, வாஸுதேவ, விஷ்ணு ஆகிய மூன்று பதங்களும், மூன்று வ்யாபக மந்த்ரங்களில் உள்ள மூன்று திருநாமங்களை உள்ளடக்கியது. மேலும் அந்த மூன்று மந்த்ரங்களில் உள்ள ப்ரணவமும்(ஓம்), நம என்பதும் இங்கு மறைமுகமாகக் கூறப்பட்டது. (இந்த மந்திரங்கள் – ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ பகவதே வாசுதேவாய், ஓம் நமோ விஷ்ணவே).

11. இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்திரம் ப்ரதாநம்

அவதாரிகை – இந்த வ்யாபக மந்த்ர த்ரயமும் தன்னிலொக்குமோ என்ன, இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம் என்கிறார்.

விளக்கம் – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – இந்த மூன்று வ்யாபக மந்த்ரங்களும் ஒரே தன்மை கொண்டவையா? மூன்றில் திருமந்த்ரமே முக்கியமானது என்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது அவ்யாபகங்களிற்காட்டில் ச்ரேஷ்டமாயிருந்துள்ள இந்த வ்யாபக மந்த்ரங்கள் மூன்றிலும் வைத்துக்கொண்டு நாராயணாய வித்மஹே என்று ப்ரதமோபாத்தமாகையாலும். அர்த்த பூர்த்யாதிகளாலும், நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர:, ந மந்த்ரோஷ்டாக்ஷராத் பர: – என்னும்படியான பெருமையையுடைய திருமந்த்ரம் ப்ரதாநமாயிருக்கும் – என்கை.

விளக்கம் – அவ்யாபக மந்த்ரங்களான பலவற்றை விடச் சிறந்தவையாக உள்ள இந்த மூன்று வ்யாபக மந்த்ரங்களில் திருமந்த்ரமே முக்கியமானது ஆகும். இதன் காரணம் என்ன? விஷ்ணு காயத்ரியில் நாராயணாய வித்மஹே என்று நாராயண நாமமே முதலில் படிக்கப்பட்டுள்ளது. மேலும் அதுவே பூரணமான பொருளை உள்ளடக்கி இருக்கிறது. மேலும் கீழே உள்ள வரிகளின் மூலமும், திருமந்த்ரமே முக்கியமானது எனலாம்.

- ந அஸ்தி சாஷ்டாக்ஷராத்பர: – அஷ்டாக்ஷரத்தை விட மேலான மந்த்ரம் வேறு இல்லை
- நரஸிம்ஹ புராணம் – ந மந்தர: அஷ்டாக்ஷராத் பர: – அஷ்டாக்ஷரத்தை விட மேலான மந்த்ரம் இல்லை

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீ ரங்கநாயகி சமேத ஶ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

## (பகுதி – 3)

(காரார் குழல் இத்யாதி) – என் உத்யோகம் எதிர்த்தலையைக் கையும் மடலுமாகக் காணப்போருங்கிடீர். (காரார் குழலெடுத்துக் கட்டி) – நீலமணி போலே நெய்த்து இருண்டு ச்ரமஹரமான குழலை எடுத்துக்கட்டி. மயிர் செறிவாலும், பருவத்தாலும், ரூபத்தாலும் எடுத்துக்கட்ட அரிதாயிருந்தபடி. (எடுத்துக்கட்டி) – அலையப் புறப்பட்டேனாகில், அவனை விலங்கிடலாங்கிடீர் என்கை. (கதிர்முலையை) – யௌவநப்புகரால் மிக்க முலையை. (வார வீக்கி) – வார் ஸபலமாம்படி வீக்கி என்னுதல். வாராலே ஆரக் கட்டி என்னுதல். கொல்லும் யானைக்கு முகபடாமிட்டாற்போலே, இக்கச்சுக் கிடந்ததில்லையாகில் அவனைப் பிச்சேற்றலாங்கீடீர் என்கிறாள். (மணிமேகலை திருத்தி) – மணிமயமான மேகலாபரணத்தை அமைத்து. அதாவது பிராட்டி யமுனையில் தெப்பமேற ஒருப்பட்டாற்போலே அவனுக்கு ஸர்வஸ்வதநாம் பண்ணினபடி. (ஆராரயில் வேற்கண்) – அழகும் கூர்மையும் ஆர்ந்த கண். (அஞ்சனத்தின் நீறணிந்து) – அழகுக்கு இடுகிறதன்றிறே, மங்களார்த்தமாக அஞ்சனமிட்டு. (அயில் வேல் கண் அஞ்சனத்தின் நீறணிந்து) – கடைந்த பத்திரத்திலே நெய்யிட்டாற்போலே.

விளக்கம் – (ஆரார் குழல் இத்யாதி) – எனது கறுமையான கூந்தலைக் கண்டவுடன் அவன் கையும் மடலுமாக வருவான் பாருங்கள். (கார் ஆர் குழல் எடுத்து கட்டி) – நீலமணி போன்ற வழவழப்புடனும், கருத்தும், காண்பவர்களின் களைப்பை நீக்க வல்லதும் ஆகிய கூந்தலை அவளுக்கு உள்ளது, அதன் அடர்த்தியாலும், அவளது வயதாலும், முடியாமல் விட்டாலே அழகாக உள்ள தோற்றத்தாலும் கூந்தலை எடுத்து கட்ட இயலாதபடி உள்ளது. (எடுத்துக் கட்டி) – கூந்தலை அள்ளி முடியாமல் சென்றால், அதனாலேயே அவனை விலங்கு போன்று கட்டி விடலாம்படி கூந்தல் உள்ளது. (கதிர் முலையை) – யௌவனம் காரணமாக ஒளி வீசும் ஸ்தனங்களை. (வாரா வீக்கி) – கச்சத்தால் அழுத்திக் கட்டியபடி, காண்பவர்களைக் கொல்லும் யானைக்கு முகபடாம் இடுவது போன்று, இதனைக் கச்சை வைத்துக் கட்டவில்லை என்றால், அவன் வந்தவுடன் விழுந்து விடுவான். (மணி மேகலை திருத்தி) – இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மேகலை என்ற ஆபரணம் அணிந்து, சீதை யமுனையில் உள்ள படகில் ஏற முற்படும் போது, இராமனுக்குத் தனது அழகு முழுவதையும் காட்டியது போல், இங்கு பரகாலநாயகி தன்னுடைய திருமேனியை அலங்கரித்து, அவனுக்குத் தன் அழகைக் காண்பிக்கிறாள் என்று கருத்து. (ஆர் ஆர் அயில் வேற்கண்) – அழகும் கூர்மையும் நிறைந்த கண்கள். (அஞ்சனத்தின் நீர் அணிந்து) – இவளது அழகான கண்களுக்கு மை தீட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், மங்களகரமாக இருக்க மேண்டும் என்பதற்காக மை தீட்டப்பட்டு. (அயில் வேல் கண் அஞ்சனத்தின் நிறணிந்து – சாணை பிடித்த ஆயுதம் மீது துரு ஏராமல் இருக்க நெய் தடவுவது போன்று, கூர்மையான வேல் ஆயுதம் போன்ற இவள் கண்களுக்கு மை உள்ளது.

(காரார் குழலெடுத்துக் கட்டி) – குழலெடுத்துக் கட்டிற்றிலேனாகில், எதிர்த்தலையைக் கையும் மடலுமாகக் காணலாங்கீடீர் என்கை. (கதிர் முலையை வாரார வீக்கி) – கொல்லும் யானைக்கு முகபடாமிட்டாற்போலே முலையின் அழகைக் கச்சாலே மறைத்திலேனாகில் நான்பட்டது அவன் படுங்கிடீரென்கை. (மணிமேகலை திருத்தி) – பரியட்டத்தைப் பேணாதே புறப்பட்டேனாகில், என் அவஸ்த்தை அவனுக்குப் பிறக்குங்கிடீரென்கை. (ஆராரயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து) – பெருவெள்ளத்திலே வாய்த்தலை படலிட்டாற்போலே கண்ணின் அழகை

அஞ்சனத்தினாலே மறைத்திலேனாகில் கண்ணுக்கு இலக்காய் அவனுக்குத் தப்பவெண்ணாது கிடீரென்றதாயிற்று.

(குறிப்பு – மேலே உள்ள பத்தியில் ஒரு பெண்ணுக்கு உரியபடி கூந்தல் திருத்தி, நேர்த்தியாக உடை அணிந்து, மை இட்டு இவள் சென்றாள் என்பதாகக் கூறப்பட்டது. இனி அவ்விதம் இவள் செல்லாமல் இந்த ஒப்பனைகள் ஏதும் செய்யாமல் இருந்திருந்தால், அவன் இவளுக்காக மடல் எடுத்திருப்பான் என்று உணர்த்த அதே வரிகள் வேறுவிதமாகப் பொருள் கூறப்பட்டன).

விளக்கம் – (கார் ஆர் குழல் எடுத்துக் கட்டி) – கூந்தலைக் கட்டாமல் அப்படியே விட்டிருந்தால், அவன் கூந்தலின் எழிலால் கவரப்பட்டு, கையும் மடலுமாக வந்திருப்பான். (கதிர் முலையை வார் ஆர் வீக்கி) – கொல்லுகின்ற யானைக்கு முகபடாம் இடுவது போன்று செய்யாமல், எனது ஸ்தனத்தின் அழகை கச்சையால் மறைக்காமல் வந்திருந்தேன் என்றால், நான் படும் துன்பத்தை அவன் பட்டிருப்பான். (மணிமேகலை திருத்தி) – மாலையையும் புடவையையும் சீர்ப்படுத்தாமல் வந்திருந்தால், எனது துன்பம் அவனுக்கு உண்டாகி இருக்கும். (ஆர் ஆர் அயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து) – பாய்ந்து வரும் வெள்ளத்தை மதகு வைத்து அடைப்பது போன்று, எனது கண்ணின் அழகை மை கொண்டு மறைக்காமல் இருந்தேன் என்றால், எனது கண் என்ற அம்பின் இலக்கிலிருந்து அவன் தப்பி இருக்கமுடியாது.

(சீரார் செழும் பந்து) – ஆரேனுக்கு ஸம்பத்துண்டாவதும் இவளுடைய ஸ்பர்சங்கொண்டிறே. பந்தார்விரலி என்று இவள் கைவிடாதிருக்கும் பந்திறே. ஸம்பத்துக்குக் குறையில்லையிறே. (செழும்பந்து) – அழகிய பந்து. (கொண்டடியாநின்றேன் நான்) – அங்யார்த்தங்கிடீர் என்னுடைய வ்யாபாரமென்கை.

விளக்கம் – (சீர் ஆர் செழும் பந்து) – யாருக்காவது செல்வம் சேர்கிறது என்றால் அது அவளுடைய (ஸ்ரீதேவி) ஸ்பர்சத்தால் (தொடுவதால்) ஆகும். திருப்பாவையில்(18) – பந்தார் விரலி – என்று கூறுவது போன்று இவள் கைவிடாமல் உள்ள பந்து. (செழும்பந்து) – அழகான பந்து. (கொண்டு அடியா நின்றேன் நான்) – அந்தப் பந்தை அடிந்து விளையாடியபடி, மறைமுகமாக அவன் வருவானா என்று எதிர்பார்த்தபடி நின்றேன்.

(நீரார்கமலமித்யாதி) – என் உத்யோகம் ஒன்றுமன்று என்னும்படி அவனுத்யோகமிருந்தபடி. (நீரார்கமலம் போல் செங்கண்மால்) – ஒரு தடாகம் பரப்புமாறத் தாமரை பூத்தாற்போலே திருக்கண்கள். ஒரு தடாகத்தை ஒரு தாமரையே கண்செறியிட அலர்ந்தாற்போலேயாயிற்று வடிவுடையக் கண்ணாயிருந்தபடி. கமலம் போல் செங்கண் என்கையாலே குளிர்த்தி, மென்மை, நாற்றம், விகாஸம் எல்லம் சொல்லுகிறது. (என்றொருவன்) – ஒருவனென்னும் ஆபாதப்ரதீதி அமையுங்கீடீர். இப்படிப்பட்டானென்று உள்ளபடியெல்லாம் பரிச்சேதிக்கப்போச்சுதில்லை என்றபடி. சார்ங்கமுடைய அடிகளை இன்னொரென்றறியேன் என்கையாலே அடையாளஞ்சொல்லா நிற்கச்செய்தே அறிந்திலேனென்னும்போது உள்ளபடியெல்லாம் பரிச்சேதிக்கப்போச்சுதில்லை என்றபடி. (பாரோர்களெல்லாம் மகிழ) – சிறியார், பெரியார், விலக்ஷணர், அவிலக்ஷணர் என்னாதபடி இருந்ததே குடியாக ப்ரியப்படும்படி வந்து தோன்றினான். பாரோர்களெல்லாமென்கையாலே மத்யமரையும் கூட்டிக் கொண்டு ப்ரியப்படும்படி வந்து தோன்றினானென்கை. (பறை கறங்க) – கொல்லும் ஆனைக்குத் தலைப்பறையடிப்பாரைபோலே பறையடிக்க வந்து தோன்றினான். (சீரார் குடம்) – பதார்த்தங்களுக்குச் சீர்மையாவது அவனொடு ஏதேனுமொரு ஸ்பர்சமுண்டாகையிறே. சீரார் குடம் என்று தன்னுடைய நோயாசையிருக்கிறபடி. (இரண்டு) – ஒரு பந்தைப் பொகடுவிக்க எடுத்தது இரண்டு குடமிறே. (ஏந்தி) – வ்யாபரியா நிற்கச்செய்தே, ஏந்தியென்னும்போது ஆகாசத்திலே நிற்கிறாப்போலே நிற்கையும், கையிலும் அப்படியே பொருந்தியிருக்கிறாப்போலே மாறிமாறி வருகிற சடக்கிருக்கிறபடி.

விளக்கம் – (நீரார் கமலம் போல் செங்கண்மால்) – ஒரு குளத்தை முழுவதுமாக நிரப்பும்படி மலர்ந்து நிற்கும் ஒரு பெரிய தாமரை போன்ற திருக்கண்கள். ஒரு குளம் முழுவதுமாக ஒரு தாமரை மலர் மட்டுமே முழுவதும் மறைத்து நிற்கும்படி, அவனது அழகான திருமேனியே கண்கள் போன்று இருந்தபடி. கமலம் போல்

செங்கண் – என்பதன் மூலம் குளிர்ச்சி, மென்மை, நறுமணம், மலர்தல் ஆகிய அனைத்தும் தாமரை போன்று இவன் கண்களுக்கும் உள்ளன என்ற கூறப்பட்டது. (என்றொருவன்) – அவனை சிறிது பார்த்தாலே மயங்குவதற்கு ஏதுவாகும். அவன் எப்படிப்பட்டவன் என்று ஆராய இயலாதபடி உள்ளவன். பெரிய திருமொழி(10–10–9) – சார்ங்கம் உடைய அடிகளை இன்னார் என்று அறியேன் – என்று அடையாளம் கூறியபோதிலும் அவனை உள்ளபடி அறிய மாட்டோம் என்று இவரே(திருமங்கையாழ்வார்) கூறினார் அன்றோ? (பாரோர்கள் எல்லாம் மகிழ) – சிறியவர்கள், பெரியவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று ஏற்றத்தாழ்வு பாராமல், அனைவரும் தன் மீது ஆசை கொள்ளும்படி வந்து நின்றான். (பறை கறங்க) – கொல்லக் கூடிய யானை ஓடி வருகிறது என்று பறையை அடிப்பது போல், பெண்களை வீழ்த்தக்கூடிய இவன் வருகிறான் என்று பறை அடிக்க இவன் வந்தான். (சீரார் குடம்) – பொருள்களுக்கு மேன்மை என்பது அவனது தொடுதல் கிட்டுவதே ஆகும். கண்ணன் குடக்கூத்து ஆடியபோது அவன் திருக்கரங்களால் தீண்டப்பட்ட குடங்களுக்கு ஏற்பட்ட மேன்மை, தங்களது ஸ்தனங்களுக்கு ஏற்படவில்லை என்று வருந்துகிறார்கள். (இரண்டு) – கையில் உள்ள ஒரு பந்தை கைவிடுவதற்காக, இரண்டு குடங்களைக் கையில் எடுத்து நின்று. (ஏந்தி) – இரண்டு குடங்களையும் மாறி மாறி, ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்குத் தூக்கி அடித்து, அவை ஆகாயத்தில் நிற்பது போன்றும், தனது கையில் உள்ளது போன்றும் விளையாடி நின்றான்.

(செழுந்தெருவே) – அகல நீளங்களாலே குறைவற்ற தெரு. வீதியாரவருவான் என்று வடிவைப் பாரித்துக் கொடுவந்த தெருவிறே. (ஆராரெனச்சொல்லி) – காரிகையார் நிறைகாப்பவர் யார் என்னுமாபோலே. என்னுடைய உத்யோகமிருந்தபடி கண்டதிறே. ஸ்த்ரீத்வாபிமாநமுடையவர்களே, உங்கள் ஸ்த்ரீத்வத்தைக் காக்கவல்லார் காத்துக்கொள்ளுங்கள் என்பாரைபோலே வந்து தோன்றினானென்கை. (ஆடுமது கண்டு) – அக்குடக்கூத்தாடுகிறபடியைக் கண்டு. (ஏராரிளமுலையார்) – அக்குடக்கூத்துக்கண்டு குறியழியாத முலை படைத்தவர்கள். (என்னையருமெல்லாரும்) – விலக்கக்கண்ட தாய்மாரும், மற்றுமுள்ளாரும். (வாராயோவென்றார்க்குச் சென்றேனென் வல்வினையால்) – ஹிதஞ்சொல்லுவாரோடு ப்ரியஞ்சொல்லுவாரோடு வாசியற எல்லாருமொக்க கெடுவாய், கெட்டாயிறே, வந்து கொள்ளாய் என்றழைத்தார்கள். (வாராயோ என்றார்க்கு) – பலகால் அழைத்து வாராதாரை அழைக்குமாபோலே, கடுக வந்துகொள்ளாயென்கிறார்கள். கண்ணை அங்கே வைத்து வாயாலே வாராயோ என்கிறார்கள். (சென்றேனென் வல்வினையால்) – கௌரவ்யர் சொன்னபடி செய்யவேணுமிறே என்று சென்றேன். (என் வல் வினையால்) – என்னுடைய மஹாபாபத்தாலே. வல்வினை என்கிறது, இப்போது பக்தியையிறே. உத்தேச்ய விரோதி பாபமாமித்தனையிறே.

விளக்கம் – (செழுந் தெருவே) – அகல–நீளங்களால் குறைவில்லாத வீதி. நாச்சியார் திருமொழி(14–5) – வீதியார வருவான் – வீதிகள் அனைத்திலும் தனது திருமேனியின் ஒளியை வீசியபடி வந்து – என்னும்படியாக வருவான். (ஆர் ஆர் எனச் சொல்லி) – என்னுடைய விளையாட்டைப் பார்த்தீர்களா? பெண்ணாக உள்ளோம் என்ற சிந்தனை உள்ளவர்களே, உங்களது பெண்மையைக் காத்துக்கொள்ளுங்கள் – என்று கூறுவது போன்று வந்து நின்றான். (ஆடும் அது கண்டு) – இப்படியாக அவன் கூத்தாடும் எழில் கண்டு. (ஏர் ஆர் இளம் முலையீர்) – அந்த கூத்தைக் கண்டும் தங்கள் ஸ்தனங்களின் அழகு கெடாமல் உள்ளவர்கள். (என்னையாரும் எல்லாரும்) – அவனிடம் செல்லாதே என்று என்னைத் தடுத்து எனது தாய்மார்களும் தோழிகளும். (வாராயோ என்றார்க்குச் சென்றேன் என் வல்வினையால்) – இவ்விதம் என்னைத் தடுத்த அவர்களே எனக்கு நல்லது சொல்லும் விதமாக, அனைவரும் கூடி நின்று – இவன் ஆடுவதைப் பார்க்காமல் நீ இதுவரை கெட்டது போதும், இனியாவது வந்து இவனைக் காண்பாய் – என்று அழைத்தனர். (வாராயோ என்றார்க்கு) – பலமுறை அழைத்தும் வராமல் இருப்பவர்களை அழைப்பது போன்று என்னை அழைக்கிறார்கள். தங்கள் கண்களை அவன் மீதிருந்து எடுக்காமல், என்னைப் பாராமல், தங்கள் வாயால் மட்டுமே வாராய் என்று அழைக்கிறார்கள். (சென்றேன் என் வல்வினையால்) – மதிக்கப்பட வேண்டிய தாய்மார்கள் கூறியபடி செய்ய வேண்டும் என்பதால் நானும் அங்கு சென்றேன். (என் வல்வுனையால்) – என்னுடைய மஹாபாவத்தால் சென்றேன். வல்வினை என்று உறுதியான பக்தியே கூறப்பட்டது. யார் ஒருவருக்கு எது விருப்பமாக உள்ளதோ, அது அவர்களுக்கு விரோதியாக மாறுவதே பாவம் என்பதாகும்.

(காரார்மணி நிறமும் கைவளையும் காணேன் நான்) – அவனோடு கலந்து பெற்ற நிறமும், அத்தாலே தரித்த வளைகளும் கண்டிலேன். காரார் மணி நிறக் கண்ணனோடே கலந்து பெற்ற நிறமும், அத்தாலே தரித்த வளைகளும் கண்டிலேன். தன் நிறத்தைத் தான் காரார்மணி நிறம் என்பானென்னென்னில் நீலமணிபோலே ஒருவடிவிருக்கும்படியே என்று அவனை வாய்ப்புலத்தக் கேட்டவாஸனையாலே காரார்மணிநிறம் என்று சிலாகிக்கிறாள். (நான் காணேன்) – எதிர்த்தலையை இக்காட்சி காணக்கடவ நான். அத்தலை இத்தலையாய் நான் காணேன். ஒளிவளையும் மா நிறமும் கொண்டார் என்று எப்போதும் அவன் விரும்பிக் கொள்வது இவையிறே.

விளக்கம் – (கார் ஆர் மணி நிறமும் கை வளையும் காணேன் நான்) – அவனுடன் கலந்து நின்றதால் நான் பெற்ற நிறமும், எனது கைவலையல்களும் காணவில்லை. இவளோ பொன்னிறம் ஆனவள், அப்படி உள்ளபோது தனது நிறத்தை – கார் ஆர் மணி நிறம் – என்று ஏன் கூறவேண்டும்? நீல மணி போல் ஒரு வடிவிருக்கும்படியே – என்று தாய்மார்களும், தோழிகளும் அவனைக் கூறுவதைக் கேட்ட சொற்களாலும், தனது வாஸனையாலும் தன்னையும் அவன் நிறமாகவே கொள்கிறாள். (நான் காணேன்) – என்னை அடைவதற்கு முன்பு அவனுக்கு உண்டான துன்பங்கள் அனைத்தும், அவன் சென்றபின் எனக்கு ஏற்பட்டது. திருநெடுந்தாண்டகம்(21) – ஒளிவளையும் மாநிறமும் கொண்டார் – என்பதற்கு ஏற்ப, அவன் மிகவும் விரும்புவது நிறத்தையும் வலையல்களையும் அல்லவோ?

(ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்) – ப்ரியஞ்சொல்லுவாரும் ஹிதஞ்சொல்லுவாரும் சொல்லும் வார்த்தைகளும் கொள்ளேன். அதாவது பிரிவாற்றாமைக்கு ஆச்வாஸஹேதுவாக வருத்த கீர்த்தநம்பண்ணி தரிக்கக் கடவதிறே. ஸ்ரீஜநகராஜன் திருமகள், ஏகாக்ஷி ஏககர்ணிகளுக்கு அகப்பட்டவன்று பன்னிரண்டாண்டு நானும் பெருமாளும் எங்கள் மாமனார் மாளிகையிலே ரஸித்தோங்காணுங்கோள் என்று தன் ஆற்றாமையாலே ராக்ஷஸிகளுக்குச் சொல்லி தரித்தாளிறே. அப்படி நான் சொல்ல மாட்டாவிட்டால், பந்துக்கள் சொல்லிற்றுக்கேட்கலாமிறே. அதுவும் மாட்டிற்றிலேன்.

விளக்கம் – (ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்) – எனக்கு நன்மைய் அளிப்பவற்றைக் கூறும் தாய்மார்களும், இன்பம் அளிப்பவற்றைக் கூறும் தோழிகளும் உரைக்கும் சொற்களைக் கேட்காமல் இருந்தேன். பிரிவுத் துன்பம் நீங்க அவர்கள் சேர்ந்து உள்ளபோது, நடந்தவற்றைக் கூறி ஆறுதல் அடையலாம் அல்லவா? சீதை அரக்கிகளிடம் இருந்தபோது, பன்னிரண்டு ஆண்டுகள் நானும் பெருமாளும் எனது மாமனாரின் அரண்மனையில் இன்பமாக இருந்தோம் எனக் கூறி, தனது பிரிவுத் துன்பத்தைச் சற்று தணித்து கொண்டாள். இவ்விதம் நான் செய்யவில்லை என்றாலும், என்னுடைய உறவினர்கள் கூறுவதையாவது கேட்கலாம் அல்லவோ? அதனையும் செய்யவில்லை.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்
(பகுதி – 3)

ஸ்நேஹோமேபரம:, என்றனளவன்றால் யானுடையவன்பு, ராஜம்ஸ்வயி இதுதானும் என்னால் வந்ததன்று, அதுவுமவனதின்னருளே. நித்யம் ப்ரதிஷ்டித: இன்றன்றாகில் மற்றொருபோது கொடுபோகிறோமென்ன, அங்ஙன் செய்யுமதன்று. தர்மியைப் பற்றி வருகிறதாகையாலே நின்னலாலிலேன்காண் என்னுமாபோலே. பக்திச்ச நியதா ஸ்நேஹமாவதென்? பக்தியாவதென்னென்னில் பெருமாளையொழியச் செல்லாமை பிறந்து வ்யதிரேகத்தில் முடிந்த சக்ரவர்த்திநிலை ஸ்நேஹம். பக்தியாவது நில் என்ன குருஷ்வ என்னும்படியாய் முறையறிந்து பற்றின இளையபெருமாள் நிலை.

விளக்கம் – (அரங்கனிடம் தனக்குள்ள அன்பைக் கூறுகிறார்) அனுமன் இராமனிடம் – ஸ்நேஹோமேபரம: – எனக்கு உம்மிடம் உள்ள அன்பு மிகவும் சிறப்பானது – என்றான், பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில்(100) – என்றனளவன்றால் யானுடையவன்பு – என்றார், அனுமன் – ராஜம்ஸ்வயி – அரசனே. உன்னிடம் எனக்கு உள்ள அன்பு என்றும் உள்ளது – என்றான். இதுபோன்று எனக்கும் உன் மீது உள்ளது(திருப்பாணாழ்வாருக்கு அரங்கன் மீது). இங்கு ஒரு கேள்வி எழலாம் – இந்த அன்பு தாமாகவே ஆழ்வாருக்கு உண்டானதா? திருவாய்மொழியில்(8–8–3) – அதுவும் அவனது இன்னருளே – என்பது போன்று, இந்த நிலை உன்னாலே வந்தது, என்னால் ஏற்படவில்லை – என்றார். இந்த அன்பு – நித்யம் ப்ரதிஷ்டித: – எப்போதும் நிலையாக உள்ளது – என்றார். இங்கு பெரியபெருமாள் ஆழ்வாரிடம் – இன்று அல்லாமல் வேறு ஒரு நாளில் உம்மை பரமபதம் அழைத்துச் செல்வோம் – என்று கூறினான். அதற்கு ஆழ்வார் – அவ்விதம் சென்றாலும் உன்னை விடுத்து என் சிந்தையானது அங்கு ஈடுபடாது – என்றார். நம்மாழ்வார் (2–3–7) – நின்னலால் இலேன் காண் – உம்மை விட்டு நான் இல்லை – என்பது போல் இவர் நிலையும் உள்ளது. அனுமன் இராமனிடம் – பக்திச்ச நியதா – பக்தியும் என்றும் உள்ளது என்றான். இங்கு ஒரு கேள்வி – அன்பும் பக்தியும் வேறுவேறா? பக்தி என்பது அவனை விட்டு அகலாமல் உள்ள நிலையே ஆகும். இராமனைப் பிரிந்த தசரதன் உயிர்விட்டது அன்பு காரணமாகும். இராமனி இலக்குவனிடம் – நீ அயோத்தியிலேயே இருப்பாயாக – என்று கூறியும், இலக்குவன் – குருஷ்வ – கைங்கர்யம் செய்பவனாக இருப்பேன் – என்று பின் தொடர்ந்தது பக்தி ஆகும்.

வீர தன்னைத் தோற்பித்த துறை. உம்முடைய வீரங்கொண்டு புறம்பே வென்றீரென்று இங்கு வெல்லமுடியது. தானும் வீரனாகையாலே தோற்பித்த துறையைப் பிடித்துப் பேசுகிறான். பாவோ நாங்யத்ர கச்சதி – என்னை மீட்டீராகிலும் என்னுடைய நெஞ்சை மீட்கப்போகாது. அங்யத்ர – என்கிறது. மற்றாரானுமுண்டென்பார் என்னுமாபோலே கொடுபோக நினைத்த தேசத்தின் பேருங்கூடத் தனக்கு அஸஹ்யமாயிருக்கிறபடி. இப்படி ராமாவதாரமல்லதறியாத திருவடியைப் போலேயாய்த்து இவரும், இவர் தேவாரமான பெரியபெருமாளையல்லாது பரவ்யூஹவிபவங்களை அறியாதபடி.

விளக்கம் – அனுமன் – வீர – வீரனே – என்று கூறுவதன் மூலம் தான் இராமனின் வீரமான குணத்திற்குத் தோற்றதை உணர்த்துகிறான். அவன் இராமனிடம் – உம்முடைய வீரத்தால் விரோதிகளை நீர் வீழ்த்தலாம், ஆனால் உமது பக்தனான

என்னை விழ்த்த இயலாது – என்றான். தானும் ஒரு சிறந்த வீரனாகையாலே இவ்விதம் பேசுகிறான். பாவோ நாங்யத்ர கச்சதி – என் மனம் வேறு பொருள்களில் செல்லாது – என்பதால் என்னை நீவிர் வென்றாலும், எனது மனதை வெல்ல இயலாது – என்றான். பரமபதநாதனின் திருநாமத்தைக் கூட உச்சரிக்க விருப்பம் இல்லாத திருமங்கையாழ்வார்(சிறிய திருமடல்) – மற்றாரானும் உண்டென்பார் – என்று கூறியது போன்று, அனுமனும் – அங்யத்ர – வேறு இடம் – என்றான். ஆக இராமனை விடுத்து வேறு எதனையும் விரும்பாத அனுமன் போன்று அரங்கன் அல்லாது வேறு எதனையும் விரும்பாமலும் அறியாமலும் இவரது நிலை இருந்தது. பெரியபெருமாளை அல்லாமல் மற்ற பர–வ்யூஹ–விபவங்களை இவர் அறிய விரும்பவில்லை.

ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் திருவவதாரஸ்தலம் உகந்தருளின திருப்பதிகள் இவையெல்லாம் பெரியபெருமாளேயானாப்போலே அவ்வோவிடங்களிலுண்டான ஸௌந்தர்ய குணசேஷ்டிதாதிகளெல்லாம் பெரியபெருமாள் பக்கலில் காணலாம். பெரியபெருமாளழகும் ஐச்வர்யமுமெல்லாம் பரமபதத்திலே முகுளிதமாயிருக்கும், அவதாரத்தில் ஈரிலைபோரும், இங்கே வந்த பின்பு தழைத்தது. எங்ஙனேயென்னில் – பொங்கோதச் சூழ்ந்த புவனியும் விண்ணுலகுமங்காதும் சோராமேயாள்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாராகையாலே அவ்வோவிடங்கள் ஸங்குசிதமாயிருந்ததிறே.

விளக்கம் – இவ்வாழ்வாருக்கு ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல், மதுரா போன்ற அவதார இடங்கள், மற்ற அர்ச்சாவதார திவ்ய தேசங்கள் ஆகிய அனைத்தும் பெரியபெருமாளாகவே தோன்றுகின்றன. இது போன்று அந்தந்த இடங்களில் காணப்படும் அழகு முதலான பல்வேறு குணங்களைப் பெரியபெருமாளிடம் காணலாம். பெரியபெருமாளின் அழகும், ஐச்வர்யமும் பரமபதத்தில் மொட்டாக மட்டுமே இருக்கும். அவதாரங்களில் ஒன்று–இரண்டு இலைகள் துளிர்த்தது போன்று மட்டுமே இருக்கும். ஆனால் திருவரங்கத்தில் மட்டுமே தழைத்து, மலர்ந்து காணப்படும். எப்படி என்றால் – நாச்சியார் திருமொழி(11–3) – பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் செங்கோல் உடைய திருவரங்கச் செல்வனார் – என்று கூறுவது போன்று பெருமை இங்கு உள்ளதால், மற்ற இடங்களில் அவை சிறிதளவே காணப்படும்.

தன்னையுகந்தாரை அனுபவிக்கையன்றியே தான் என்றால் விமுகராயிருப்பாரும் கண்டனுபவிக்கலாம்படி இருக்கையாலே நீர்மையினால் வந்த ஏற்றமிங்கேயுண்டு. குணாதிக்யத்தாலேயிறே வஸ்துவுக்கு உத்கர்ஷம். குணம் விலைபெறுவது இங்கேயிறே. குணத்திலகப்பட்டார் இவ்விஷயம் போக்கி அறியார்களிறே.

விளக்கம் – தன்னை மிகவும் விரும்புபவர்கள் மட்டுமே அனுபவிக்கும் இடங்களாக சில உள்ளன(பரமபதம் போன்றவை). அப்படி அல்லாமல், தன்னிடம் மிகவும் ஈடுபாடு இல்லாதவர்களுக்கும் ஈடுபாடு உண்டாக்கும்படி தன்னுடைய எளிமையால் வந்து சயனித்த ஏற்றம் திருவரங்கத்திற்கு உண்டு. ஒரு பொருளின் உயர்வு என்பது அந்தப் பொருளிடம் உள்ள குணங்களால் அல்லவோ? ஆனால் குணங்கள் உயர்வு பெறுவது பெரியபெருமாள் மூலமாக அன்றோ? அவனது குணத்தில் மயங்கியவர்கள், பெரியபெருமாளை அல்லாமல் வேறு எதனையும் அறியாதவர்கள் அல்லவோ?

யதோ வாசோ நிவர்த்தந்தே என்று வேதங்களுக்கெட்டாத ஸர்வேச்வரனை, ஆற்றில் தண்ணீரோபாதி ஆற்றுக்குள்ளே கண்டனுபவிக்கலாம்படி இருக்கிறவிடமிறே. மழைக்கன்றுவரைமுனேந்தும் மைந்தன்மதுரவாறான அவ்வாறு இவ்வாறாய்த்துக் காணும். இவர் தமக்கு ப்ராப்யரும் ப்ராபகரும் ருசிஜநகரும் விரோதி நிவர்த்தகருமெல்லாம் பெரியபெருமாளே என்றிருக்கிறார்.

விளக்கம் – தைத்திரீய உபனிஷத் – யதோ வாசோ நிவர்த்தந்தே – வாக்கும் மனமும் ப்ரஹ்மத்தை அளவிட இயலாமல் திரும்பின – என்று கூறியது. இப்படிப்பட்ட அந்த ஸர்வேச்வரனை, இரண்டு காவேரி ஆற்றின் நடுவில், அந்தத் தண்ணீர் போன்று எளிதாகக் கண்டு அனுபவிக்கும்படியான இடம் திருவரங்கம் அல்லவோ? திருமாலையில்(36) – மழைக்கு அன்று வரை முனேந்தும் மைந்தனே மதுர ஆறே – என்று கூறப்படும் இனிய ஆறு(க்ருஷ்ணன்) அல்லவோ இங்கு பெரியபெருமாளாக உள்ளது. இப்படிப்பட்ட பெரியபெருமாளைத் திருப்பாணாழ்வார் தன்னால்

அடையக்கூடிய ப்ராப்யமாயும், ப்ராபகமாயும், இவ்விதம் அடைவதற்கு ஏற்ற ருசியை(விருப்பம் எனலாம்) விளைவிப்பதாகவும் கொண்டார்.

பலபோக்த்ருத்வம் தம்மதாயிருக்க எல்லாமவரே என்கிறபடி எங்ஙனேயென்னில் ப்ரதமஸ்க்ருதமும் தானாய் பேற்றுக்கு வேண்டுவன நிர்வஹித்துப்போந்த ஸௌஹார்த்தமும் அத்தலையிலே கிடக்கையாலே, பேற்றுக்கு இத்தலையிலுள்ளது சொல்லப்பாத்தம் போராதிறே உள்ளதுண்டாகில் அனுக்ரஹத்துக்கு ஹேதுவாமித்தனை. இதர விஷயங்களில் அருசியும் பகவத் விஷயத்தில் அப்ரதிஷேதமும் விளைந்த இம்மாத்ரத்திலே பெரியபெருமாள் தம்முடைய ஸ்வரூப ரூப குணவிபூதிகளைக் காட்டக் கண்டனுபவித்து ப்ரீதராகிறார். ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட என்று மஹாராஜரையிட்டு ஸ்ரீவிபீஷணாழ்வானை அருள் பாடிட்டாப்போலே, தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து கடைத்தலையிருந்து வாழும் சோம்பராயிருக்கிற லோகஸாரங்க மஹாமுனிகளை அருள் பாடிட்டு, நம் பாடுவோனை அழைத்துக் கொண்டு வாரும் என்ன, அவரும் அருள்பாடருள்பாடு என்று சொல்ல, இவரும் அடியேன் அடிப்பாணனடிப்பாணன் என்று இறாய்க்க, அவரும் விடாதே தோள் மேலே எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டுபோக, வழியிலே ஒன்பது பாட்டுப்பாடித் திருப்பிரம்புக்குள்ளே நின்று பத்தாம் பாட்டுப் பாடித் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் – பெரியபெருமாளை இவர் அனுபவித்தபடி உள்ளபோது, அனைத்தும் பெரியபெருமாளே என்று கூறுவது எப்படி? பெரியபெருமாள், தன்னிடம் ஒருவன் வந்து சேர்வதற்கு உறுப்பான முதல் புண்ணியத்தை, அவனே ஏற்படுத்தி வைக்கிறான். மேலும் அவ்வப்போது தன்னிடம் சேதனனுக்கு உள்ள உறுதி தளராமல் நிலை நிறுத்தும்படியாக ஆழமான நட்பைக் கொண்டபடி உள்ள தன்மை பெரியபெருமாளிடம் உள்ளது. ஆக பெரியபெருமாளை அடைய சேதனனிடம் ஏதும் இல்லை என்றே கூறிவிடலாம். அப்படி உள்ளபோது பெரியபெருமாளின் அருளுக்கு ஒருவன் பாத்திரம் ஆவதற்கு என்ன காரணம்? உலக விஷயங்களில் பற்று இல்லாமையும், பெரியபெருமாள் இவனைத் தன் பக்கம் இழுக்க முனையும்போது, இவன் தடுக்காமல் இருந்தாலுமே போதுமானது. இந்த இரண்டை மட்டுமே மிகவும் உயர்ந்தது என்று பெரியபெருமாள் தன்னுடைய ஸ்வரூபம், ரூபம், கல்யாண குணங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்திவிடுகிறான். இதனைக் கண்டு ஆழ்வார் மிகவும் மகிழ்ந்து போகிறார். ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட – வானரர்களில் சிறந்த சுக்ரீவனே, அவனை அழைத்து வா – என்று சுக்ரீவன் மூலமாக விபீஷணனை இராமன் அழைத்தான், அதுபோன்று திருவாய்மொழி(3–2–4) கூறுவது போன்று – தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து – மற்ற விஷயங்களில் ஈடுபடாமல் உள்ளவரும், திருமாலையில்(38) கூறுவது போன்று – கடைத்தலையிருந்து வாழும் சோம்பர் – கோயில் தொண்டில் மட்டுமே ஈடுபட்டபடி உள்ளவரும் ஆகிய லோகஸாரங்க மஹாமுனிவனை அரங்கன் அழைத்தான், அவரிடம் – நம்மைப் பாடுபவனான திருப்பாணனை அழைத்துக் கொண்டு வாரும் – என்றான். அவர் ஆழ்வாரிடம் சென்று – அருளப்பாடு – என்று பெரியபெருமாளின் உத்தரவைக் கூறினார். இதனைக் கேட்ட ஆழ்வார் – அடியேன் அடிப்பாணன் அடிப்பாணன் – என்று தனது தகுதியைக் காட்டி மறுத்தார். ஆயினும் முனிவர் விடாமல், தனது தோள்களில் ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணிச் சென்றார். செல்லும் வழியில் ஆழ்வார் ஒன்பது பாசுரங்கள் அருளிச் செய்தார். பெரியபெருமாள் திருமுன்பாக நின்று பத்தாவது பாசுரத்தைக் கூறி இந்தப் பிரபந்தத்தை நிறைவு செய்தார்.

1. அமலன் ஆதி பிரான் அடியார்க்கு என்னை ஆள்படுத்த
   விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்
   நிமலன் நின்மலன் நீதி வானவன் நீள்மதிள் அரங்கத்து அம்மான் திருக்
   கமல பாதம் வந்து என் கண்ணில் உள்ளன ஒக்கின்றனவே

பொருள் – மிகவும் தூய்மையானவன், இந்த உலகின் காரணமானவன், எனக்கு அனைத்தும் செய்பவன், மிகவும் தாழ்ந்த என்னை அவனது அடியார்களுக்குத் தொண்டனாக மாற்றியதால் உண்டான மகிழ்ச்சி என்னும் ஒளியுடையவன், நித்யசூரிகளின் தலைவன், நறுமணம் வீசும் சோலைகள் நிறைந்த திருமலையில் வாசம் செய்பவன், என்னிடம் ஏதும் எதிர்பாராமல் உதவும் பெருமை உள்ளவன், எனக்கு உதவுவதைத் தனது பேறு என்ற எண்ணியபடி உள்ளவன், எஜமான–அடிமை உறவுமுறை மாறாமல் இருக்கும் பரமபதத்தின் நாயகன் – இப்படிப்பட்டவன் யார் என்றால் – உயர்ந்த திருமதிள்கள் சூழ்ந்த திருவரங்கத்தின் பெரியகோயிலில்

கண்வளரும் அழகியமணவாளன் ஆவான். அவனது திருவடித்தாமரைகள் எனது கண்களில் தானாகவே வந்து புகுந்தன.

## வ்யாக்யானம்

(அமலன்) – நித்யஸம்ஸாரியாய்த் தண்ணியராயிருக்கிற தாம் கிட்டுகை அத்தலைக்கு அவத்யமென்றிருந்தார். வந்து கிட்டின பின்பு பெரியபெருமாளுக்குப் பிறந்த வைலக்ஷண்யத்தைக் கண்டு அமலன் என்று கொண்டாடுகிறார். அமலன் என்றது ஹேய ப்ரத்யநீகனென்றபடி. அபஹதபாப்மத்வாதிகுணங்கள் ஆத்மாவுக்குண்டாயிருக்கச்செய்தேயும் ஹேயஸம்பந்தாவஹமாய், பகவத் ப்ரஸாதத்தாலே உண்டாக வேண்டியிருக்கும். இவன் அங்ஙனன்றிக்கேயிருக்கை.

விளக்கம் – எப்போதும் ஸம்ஸாரத்தில் சுழன்றபடியும், தாழ்ந்த குலத்தில் உள்ளவராகவும் இருந்தபடியால், தான் பெரியபெருமாளிடம் செல்வது அவனுக்குத் தாழ்வை ஏற்படுத்திவிடும் என்ற எண்ணி, அவனைச் சென்றடையாமல் இருந்தார். ஆனால் (பெரியபெருமாளின் உத்தரவின் பேரில்) பெரியபெருமாளிடம் தான் சென்றதும், அவனது திருமுகத்தில் உண்டான மகிழ்வையும் மலர்ச்சியையும் கண்டு, அவன் குற்றமற்றவன் என்று புகழ்ந்தார். அமலன் என்ற பதம் தாழ்வுக்கு எதிர்தட்டாக உள்ளவன் என்ற பொருள் அளிப்பதாகும். பரமாத்மாவைப் போன்றே ஜீவாத்மாவுக்கும் பாவம் அற்றவன் முதலான தன்மைகள் உண்டு, ஆனால் ஜீவன் கொண்டுள்ள உடல் தொடர்பு காரணமாக அந்தத் தன்மைகள் பகவானின் அருளால் மட்டுமே வெளிப்படும். ஆனால் பரம்பொருளோ இவ்விதம் அந்தத் தன்மைகள் வெளிப்பட வேண்டிய அவசியம் இல்லாமல், அவற்றை எப்போதும் வெளிப்படுத்தியபடியே உள்ளான்.

(அமலன்) சுத்தனென்றபடி. இவன் சுத்தனாகையாவது தான் ஒருத்தன் சுத்தனாகையன்று, தன்னோடு ஸம்பத்தித்தாரையும் சுத்தராக்கவல்ல அடியுடைமை. துயரறு சுடரடியிறே. பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வம் ஏவ ரகுநந்தந என்னுமாபோலே. (அமலன்) என்கிறது – ஜன்மவ்ருத்தாந்திகளால் குறைய நின்ற தம்மை விஷயீகரித்த பின்பு தன்பக்கல் தோஷம் தட்டாதே அநச்நந்நந்யோ அபிசாகசீதி என்கிறபடியே விளங்குகிறபடி. என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே.

விளக்கம் – மிகவும் தூய்மையானவன். தூய்மை என்பது, தான் மட்டும் எந்தவிதமான குற்றமும் இல்லாமல் இருப்பதோடு அல்லாமல், தன்னை சார்ந்தவர்களையும் அவ்விதமே மாற்றவல்ல திறன் கொண்டவன் என்பதாகும். இதனை திருவாய்மொழியில்(1–1–1) – துயரறு சுடரடி – என்றார். இராமாயணம்(உத்தர காண்டம்:82–9) – பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வம் ஏவ ரகுநந்தந – ராமா. இந்த உலகங்கள் அனைத்தையும் தூய்மைப்படுத்த வல்லவன் நீயே – என்றது. மேலும், பிறவியால், ஒழுக்கத்தால் மிகவும் தாழ்ந்த என்னை, அவன் ஏற்றுக் கொண்ட பின்னரும், தான் எந்தவிதத்திலும் தாழ்ந்துவிடாமல் உள்ளான். முண்டக உபனிஷத்(3–1–1) – அநச்நந்நந்யோ அபிசாகசீதி – கனியை உண்ணாமல் ப்ரகாசமாகவே உள்ளது – என்று கூறுவது போன்று உள்ளான். இது ஏன் என்றால், நம்மாழ்வார்(3–3–4) – என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே – என்றார்.

(ஆதி) ஆதீயத இதி ஆதி: – ஸ்ப்ருஹணீயனென்றபடி. தம்மை விஷயீகரிக்கைக்கு அடியானானென்று ஆதி என்னவுமாம். ஜகத்காரணத்வாதிகளைச் சொல்லவுமாம். ஆக இரண்டு பதத்தாலும் ஹேயப்ரத்யநீகத்வமும் கல்யாணகுணயோகமும் சொல்லுகிறது.

விளக்கம் – ஆதீயத இதி ஆதி: – அனைவராலும் ஏற்கப்படுபவன் ஆதி – என்று கூறப்பட்டது. அனைவராலும் விரும்பப்படுபவன் ஆவான். தன்னை(ஆழ்வாரை) ஈடுபடுத்திக்கொண்டதற்குக் காரணமாக உள்ளதால் ஆதி என்றார். இந்த உலகின் காரணமாக உள்ளதால் ஆதி எனப்பட்டான். ஆகவே அமலன் மற்றும் ஆதி ஆகிய இரண்டு சொற்களாலும் பெரியபெருமாள் தாழ்வுகளால் தீண்டப்படாமல் உள்ளான் என்றும், திருக்கல்யாண குணங்களின் இருப்பிடமாக உள்ளான் என்றும் உணர்த்தப்பட்டது.

(பிரான்) – இவ்வோநிலைகளை எனக்கறிவித்த உபகாரகன். (பிரான்) உபகாரத்தைச் சொல்லி, சொல்லப்பற்றாமே எத்திறம் என்கிறார்.

விளக்கம் – அவனைப் பற்றி இவ்விதமாக எனக்குத் (ஆழ்வார்) தெரியப்படுத்தியவன், இப்படிப்பட்ட உதவி செய்தவன். மேலும் பல உதவிகளும் செய்யத் தயாராக உள்ளவன்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

## ஆண்டாள் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஆண்டாளின் திருநக்ஷத்ரமான திருவாடிப்பூரம், இந்த மாதம் 15.08.2007. அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து ஆண்டாளைப் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

### கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

ஸ்ரீபூமிப்பிராட்டியார் திருவவதாரமான சூடிக்கொடுத்த நாச்சியாருக்குத் திருவவதாரஸ்தலம் பாண்டியமண்டலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர். திருவவதரித்தது பெரியாழ்வாருடைய திருநந்தவனத்தில் திருத்துழாயடியிலே. திருநக்ஷத்ரம் ஆடி மாஸம் பூர்வபக்ஷத்தில் சதுர்த்தி செவ்வாய்க்கிழமை திருவாடிப்பூரம் வரீயாந்நாமயோகம் பத்ரகரணம் துலாலக்னம் மத்யாஹ்ந ஸமயத்தில். பூமியிலே இருந்தி பெரியாழ்வார் திருமாளிகையிலே வளர்ந்தருளினார். திருநாமங்கள் சூடிக்கொடுத்தாள், கோதை, ஆண்டாள், ஆழ்வார் திருமகள். இவள் எழுந்தருளியிருக்கிறது நூற்றெட்டுத் திருப்பதிகளிலும். அதிலும் ப்ரதானம் ஸ்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர். இவர் அருளிச் செய்த ப்ரபந்தங்கள் திருப்பாவை முப்பது பாட்டும், நாச்சியார் திருமொழி நூற்றுநாற்பத்து மூன்று பாட்டும். இவள் பாடின திருப்பதிகள் திருவாய்ப்பாடி, திருப்பாற்கடல், வடமதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், கோயில், திருமலை. இவளுக்குத் திருவாராதனம் நம்பெருமாள். ஆசார்யர் பெரியபெருமாள்.

### இவளுக்குத் தனியன் (பாரசரபட்டர் அருளிச் செய்தது)

நீளாதுங்க ஸ்தநகிரிதடீ ஸுப்தம் உத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதி சத சிரஸ் ஸித்தம் அத்யாபயந்தீ
ஸ்வ உச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதம் இதம் பூய ஏவ அஸ்து பூய:

இதன் பொருள் – நப்பின்னை பிராட்டியின் ஸ்தனங்கள் என்னும் மலைகளின் சாரலில் கண்வளர்பவனும், இவளது மாலையை தன்க்கு விலங்காகக் கொண்டு கட்டுப்பட்டு உள்ளவனும் ஆகிய க்ருஷ்ணனை திருப்பள்ளி உணர்த்தினாள். வேதங்களின் தலைப்பாகமாக உள்ள வேதாந்தங்கள் கூறும் தனது அடிமைத்தனத்தை கண்ணனிடம் அறிவித்தாள். தானாக வலியச் சென்று அவனை அனுபவித்தபடி இருந்தாள். இப்படிப்பட்ட ஆண்டாளின் விஷயமாகக் கூறப்படும் இந்த நமஸ்காரங்கள், காலம் என்ற தத்வம் உள்ளவரை விளங்க வேண்டும்.

### ஆண்டாள் திருவடிகளே சரணம்